
தொழில்சார்கல்வி

# மெல்லக்கற்கும் மாணவர்கள்



120124

ஆசிரியர் கல்விப் பாடநெறி

| | |
|---|---|
| எழுத்தாளர் | டப்.யூ. பிரேமதாஸ |
| பாடப்பதிப்பாசிரியர்கள் | ஆர். ஆர்.அபயவர்தன |
| | பி. எல். ராஜபக்ஸ |
| | எஸ். கருணாரத்ன |
| | ஜீ. பி. வன்னிநாயக |
| | பி. எம். எல். ஆர். பண்டார |
| | எஸ். ஏ. சீ. எம். கராமத் |
| தளக்கோலம் | அ. ஷானாஸ் |
| | ஏ. சிவராஜா |
| மேற்பார்வை | ஆர். பீ. ஏ. ஜயசேகர |
| | கே. ஏ. பியதிஸ்ஸ |
| பணிப்பு | கலாநிதி எஸ். டீ. எல். அமரகுணசேகர |

I. Puspalatha

# மெல்லக்கற்கும் மாணவர்கள்

தொலைக்கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்

2 - PP 1907 - 10,000 (92/04)

உள்ளடக்கம் பக்கம்


0.0 அறிமுகம் .................................... 3

1.0 குறிக்கோள்கள் .................................... 3

2.0 முற்சோதனை .................................... 4

பகுதி I

3.0 மெல்லக் கற்கும் மாணவருக்கு கற்பித்தல் தொடர்பான அடிப்படை விதிகள் .................................... 5

பகுதி II

4.0 ஆள் சார்ந்த கற்பித்தல் வழிமுறைகள் ...... 17

பகுதி III

5.0 வேலைப் பகுப்பு என்றால் என்ன? ........ 20

6.0 பொழிப்பு .................................... 24

7.0 பிற்சோதனை .................................... 26

8.0 ஒப்படை .................................... 27

9.0 விடைகள் .................................... 28

10.0 அனுபந்தம் .................................... 29


© 1991 தேசிய கல்வி நிறுவகம்

பதிப்பு 1 : 1

## 0.0 அறிமுகம்

சாதாரண வகுப்பறையொன்றினுள் பல வகை வேறுபாடு களையுடைய மாணவரை நாம் சந்திக்கின்றோம். அவர்களின் திறன்கள், பலவீனங்கள் போன்றவை வித்தியாசமான வையாகும். மாணவருள் காணப்படும் இவ்வாறான வேற்றுமைகளையிட்டு நீங்கள் அவதானத்துடன் இருத்தல் வேண்டும். மெல்லக் கற்கும் மாணவர், பொதுவான மாணவரைப் போன்று கற்றலில் ஈடுபாடுடையோராக இருக்கமாட்டார்.

ஆய்வு, பரிசோதனை, செயன்முறை, அவதானிப்பு, விளையாட்டுப் போன்ற பல்வேறு வகையான விஷேட உத்திகள் இன்றி, பொதுவான மாணவர்கள் பல விடயங்களைத் திருப்திகரமாகக் கற்றுக்கொள்வர். ஆயினும் மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவர் ஆசிரியரின் விஷேட உதவிகள் இன்றி சிறிய விடயங்களையும் கற்றுக் கொள்ளச் சிரமப்படுவர்.

விஷேட கற்பித்தல் நுட்பங்களையும், வழிமுறைகளையும் கையாளுவதன் மூலம், மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவரையும் வகுப்பறையில் சுறுசுறுப்பாகச் செயற்படும் மாணவராக மாற்ற முடியும். இவ்வாறான விஷேட கற்பித்தல் முறைகளையும் நுட்பங்களையுமிட்டு இம் மொடியூலில் கலந்துரையாட எதிர்பார்க்கப்படுகின்றது.

## 1.0 குறிக்கோள்கள்

இம்மொடியூலைக் கற்பதன் மூலம் மாணவர்கள் பின்வரும் நோக்கங்களை அடைவார்களென எதிர்பார்க்கப் படுகின்றது.

* மெல்லக் கற்கும் மாணவரும் வகுப்பறையினுள் ஊக்கத்துடன் கற்கும் சாதாரணமான மாணவர்களாக மாற முடியுமென்பதை ஏற்றுக் கொள்வர்.
* மெல்லக் கற்கும் மாணாக்கருக்கு ஏற்புடைத்தான கற்பிக்கும் நுட்பங்கள் சிலவற்றை இனங்காட்டுவர்.
* இவர்கள் சார்பாக கையாள வேண்டிய வழிமுறைகள் சிலவற்றைப் பயன்படுத்துவர்.
* மெல்லக் கற்கும் மாணவர் சார்பான கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கும் போதும், நடைமுறைப்படுத்தும்போதும் கையாள வேண்டிய வழிமுறைகள் சிலவற்றை பயன்படுத்திக் காட்டுவர்.

## 2.0 முற்சோதனை

இம் மொடியூலைக் கற்கும்போது கூடிய பாவனை பெறுவதற்காகவும் உங்களைத் தக்கவாறு தயார் படுத்திக் கொள்வதற்காகவும் கீழ்வரும் வினாக்களுக்கான விடைகளைக் காணுங்கள். மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.

1. பொதுவான ஒரு வகுப்பறையில் கற்கும் மாணவர் ஒருவரை ஒருவர் ஒத்திருப்பது,

   i. திறன்கள் அடிப்படையில்.
   ii. கால வயதில்.
   iii. உள வயதில்.
   iv. குறைபாடுகளில்.

2. பொதுவாக வகுப்பறையொன்றில், கற்றல் தடையாக அமையும் முக்கிய காரணி,

   i. கற்றலுக்குத் தேவையான எழுது பொருள்கள் இல்லாதிருத்தல்.
   ii. பாடசாலையின் வசதிக் குறைபாடுகள்.
   iii. மாணவர் அடிக்கடி தொற்றுநோய்களுக்கு ஆளாதல்.
   iv. வகுப்பறையிலுள்ள எல்லா மாணவருக்கும் ஏற்றவாறு பாடங்களைத் திட்டமிடல்.

3. ஆசிரியர்கள் கற்பித்தல் முறைகளைத் திட்டமிடும்போது விஷேடமாக கவனத்திற் கொள்ள வேண்டியவை,

   i. மாணவனின் ஆற்றல் மட்டம்.
   ii. மாணவரின் உடல் வளர்ச்சி.
   iii. மாணவன் பிறந்த ஊர்ப்பிரதேசம்.
   iv. மாணவரின் பெற்றோரினது பொருளாதார நிலைமை.

4. கீழ் தரப்பட்டுள்ளவற்றில் மெல்லக் கற்கும் மாணவரிடையே காணப்படும் முக்கிய இயல்புகள் யாவை ?

   i. வகுப்பறை வேலைகளில் மிகவும் கூடிய ஊக்கத்துடன் செயற்படல்.
   ii. குழு வேலைகளின்போது அடிக்கடி கோபமுறல்.
   iii. குறிப்பிட்டதோர் ஆற்றலைக் கற்றுக் கொள்ளக் கூடிய நேரம் எடுத்தல்.

iv. பொறுப்புக்கள் அளிக்கப்படும்போது குழப்ப முறல்.

5. வகுப்பறையில் கல்வி கற்கும் மாணவருள் ஆசிரியரின் உதவி மிகவும் அதிகமாகத் தேவைப்படுவது,

i. திறமையுள்ள மாணவருக்கு.
ii. சாதாரண மட்டத்திலுள்ள மாணவருக்கு.
iii. மீத் திறனுடைய மாணவருக்கு.
iv. மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்கு.

உமது விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

பகுதி I

## 3.0 மெல்லக் கற்கும் மாணவருக்கு கற்பித்தல் தொடர்பான அடிப்படை விதிகள் :-

இதற்கு முன்னர் நீர் கற்ற விஷேட தேவைகளையுடைய மாணவர் என்ற மொடியூலில் மெல்லக் கற்கும் மாணவர்,

(i) உள வளர்ச்சியை தாமதமாக பெறும் மாணவர்
(ii) மெல்லக் கற்றலில் ஈடுபடும் மாணவர்,

என இரு வகையினராக இனங்காணப்பட்டனர். இப்பகுதியில் இவ்வாறு இனங்காணப்பட்ட, தாமதமாக கற்றலில் ஈடுபடும் மாணவருக்கு கற்பித்தலின்போது கையாளவேண்டிய விதிகள் பற்றிக் கலந்துரையாடுவோம். இவ்விதிகளைக் கீழ்வரும் தலைப்புக்களில் ஆராய்வோம்.

**மீள வலியுறுத்தல்**

அநேகமாக வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு, மீளவலியுறுத்தல் அவசியமாகின்றது. நீங்கள் ஒருவரைச் சந்திக்கும்போது அவரை நோக்கி நட்புறவுடன் புன்னகை புரிகின்றீர்கள் எனக் கொள்வோம். அவரும் புன்னகையின் மூலம் தமது நல் எண்ணத்தை வெளிப்படுத்துவார். இவ்வாறாக வெளிப் படுத்தப்படும் "புன்னகை" சமூக மீள வலியுறுத்தலாகும். இவ்வாறு (புன்னகையின் மூலம்) மீளவலியுறுத்தல் காரணமாக திரும்பவும் சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும் நட்புரிமை அதிகரிக்கும். இவ்வாறான மீள வலியுறுத்தல் சமூக ரீதியான நிலைப்படுத்துதலாகும்.

கற்பித்தலின்போது பயன்படுத்தப்படும் இது போன்ற வேறு சில வகை மீளவலியுறுத்தல்களும் உள. அவற்றைக் கீழ் குறிப்பிட்டுள்ளோம்.



3 - PP 1907

* சமூக ரீதியான மீளவலியுறுத்தல்.
(சிறுநகை, புன்னகை, பாராட்டு, நன்று, அக்கறை காட்டுதல், நட்புரிமையுடன் செயற்படுதல் போன்றவை)

* செயல் ரீதியான மீளவலியுறுத்தல்.
(விருப்பமான விளையாட்டில் ஈடுபடல், விருப்பமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அவதானித்தல், சைக்கிள் ஓட்டுதல், பாட்டுப்பாடல், கதை சொல்லுதல், விருப்பமான விளையாட்டுப் பொருளொன்றை வைத்து விளையாடுதல் போன்றவற்றிற்கு இடமளித்தல்)

* பொருள் ரீதியான மீளவலியுறுத்தல்.
(டொபி, பிஸ்கட், ஐஸ்கிரீம், சின்னங்கள், நட்சத்திரம் போன்றவற்றை அளித்தல்)

ஆயினும் இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியது யாதெனில், மேற்படி செயல்கள் எப்போதுமே "மீளவலியுறுத்தலாக" மாட்டாது என்பதாகும். குறிப்பிட்டதோர் நடத்தையின் பின்னர் தரப்படும் பொருள் அல்லது புரியப்படும் செயல் காரணமாக முன்னைய நடத்தை திரும்பவும் வெளிப்படுத்தப்படுமாயின், மேற்படி பொருள் அல்லது செயல் மீளவலியுறுத்தலாக அமையுமெனக் கொள்ளலாம்.

மேலும் எல்லாரும் ஒரேவிதமான, மீளவலியுறுத் தலை எதிர்பார்த்த வண்ணம் செயற்படமாட்டார்கள். ஆகவே ஒவ்வொரு ஆள் சார்பாகவும், மிகவும் ஏற்புடைத்தான மீளவலியுறுத்தலைக் கண்டு கொள்ளல் அவசியமாகும்.

* சமூக ரீதியான மீளவலியுறுத்தலுடன், செயல் ரீதியானதும், பொருள் ரீதியானதுமான மீளவலியுறுத்தல்களையும் ஒன்றாக (ஒரே தடவையில்) அளிக்க முடியும். இதன் மூலம் சமூக ரீதியான நிலைப்படுத்தல்களின் பெறுமதியைப் படிப்படியாக அதிகரித்துக் கொள்ள முடியும்.

* மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவரின் மிகச் சிறிய செயற்பாட்டினையும் வெற்றிகரமாக்குவதற்கு மீளவலியுறுத்தல் அவசியமாகும். நோக்கம் முற்று முழுதாக நிறைவேற்றப்படுவதை எதிர்பார்த்து மீளவலியுறுத்தல் அளிக்கப்படுதல் தாமதப்படுத்தப்படக் கூடாது.

மீளவலியுறுத்தல் தாமதித்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

* குறிப்பிட்டதோர் எண்ணக்கருவினைக் கற்றுக் கொள்ளும் ஆரம்ப காலகட்டத்தினுள் எடுக்கப்படும் சிறிய முயற்சியும், மீளவலியுறுத்தப்படல் வேண்டும். படிப்படியாக நோக்கம் நிறைவேற்றப்படும்போது மீளவலியுறுத்தல் தொடரப்படல் அவசியம்.

* அவ்வாறே மேற்படி எண்ணக்கருவினை கற்றதன் பின்னர் அவரின்/அவளின் அடைவினைப் பற்றி தன்னிச்சையாகக் கிரகித்துக் கொள்ளல் மிகவும் அவசியமாகும்.

* மாணவன் விரும்பும் செயற்பாடுகளை இனங் காணுங்கள். அவற்றை மீளவலியுறுத்தலாக பயன் படுத்துவதன் மூலம், பயனுள்ள விளைவுகளைப் பெறமுடியும்.

* நன்நடத்தை ஒன்றை அவதானித்த அதே கணத்திலேயே மீளவலியுறுத்தலும் நடைபெறல் அவசியமாகும். மீளவலியுறுத்தல் சார்பாக கால தாமதம் ஏற்படுமாயின், அஃது பிழையான நடத்தை ஒன்றிற்கான உந்துதலாக அமையவும் கூடும். ஆகவே எதிர்பார்க்கப்பட்ட கற்றல் நிகழ்வு நடைபெற்றவுடன் மீளவலியுறுத்தலும் நடை பெறல் வேண்டும்.

**தாமதமாகக் கற்றுக் கொள்ளும் மாணவருக்கு கற்றலில் சித்தியடைதல் தொடர்பாக வெற்றிகரமான அனுபவங் களைப் பெற்றுக் கொடுத்தல்**

தாமதமாகக் கற்றுக் கொள்ளும் மாணவர்கள், கல்வி நடவடிக்கைகளில் மிகக் குறைவாகவே சித்தி எய்துகின் றார்கள். ஆகவே இவர்கள் பாடசாலை வேலைகளையிட்டும், நடவடிக்கைகளையிட்டும், பாடசாலை வாழ்க்கையையிட்டும் அதிருப்தி அடைகின்றனர். இதன் மூலம் தீமையான நோக்கங்கள் வளர்ச்சியடைந்து, நடத்தை சார்பான சிக்கல் களை ஏற்படுத்துவதற்கும் ஏதுவாகின்றது. ஆகவே இவ்வாறான குறைபாடுகளை நீக்கிக் கொள்வதற்கு மிகவும் ஏற்புடைத்தான முறை, நீண்ட கால, மற்றும் குறுகிய கால நோக்கங்களை உள்ளடக்கும் வகையில் பாடங்களைத் திட்டமிடுவதாகும். தாமதமாக கற்றுக் கொள்ளும் மாணவருக்குத் திருப்திகரமான அனுபவங்களைப் பெற்றுக் கொடுத்தலே, அவர்களது கற்றல் சார்பாகச் செயற்படும் மிகவும் முக்கிய காரணி என உளவியலாளர் சிந்திக் கின்றனர்.

தன்னிச்சையாக மதிப்பிடுதலும் தன்னைப் பற்றிய விளக்கமும் பெறுதற்காக, இவ்வாறான வகுப்பறைப் பயிற்சிகளில் ஈடுபடுதல் அவசியமாகும். ஆகவே வகுப்பறை யிலுள்ள சகல மாணவரும் பயனடையும் வகையில் பாடங்களைத் திட்டமிடுதல் உங்கள் கடமையாகும். மேலும் இது தொடர்பான நல் இணக்கமுடைய எண்ணக்கருக்களை உங்களுள் வளர்த்துக் கொள்வதும் அவசியமாகும்.

**செயன்முறைக் கற்பித்தல்**

வாய்மொழி மூலம் விளக்கமளிப்பதனால் மாத்திரம் மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்குத் திருப்திகரமாகக் கற்பிக்க முடியாது.

செயற்பாடொன்று நடைபெறும் முறையை அல்லது அதன் நடைமுறையினை அதே முறையில் காட்சிப்படுத்துதல் பயனுள்ளதாகும். இதன்படி செயற்பாடு, எண்ணக்கரு அல்லது விதி பற்றி செயல் ரீதியான அனுபவம் பெற்றுத் தரப்படல் மிக முக்கியமாகும். ஆகவே கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் செயல் ரீதியான அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பது போன்றே தபாற்கந்தோர், வைத்திய சாலை, பௌத்த கோயில், பள்ளிவாசல், கோயில், பொதுச்சந்தை போன்ற பொது இடங்களைப் பார்ப்பதன் மூலமும் நேரடி அனுபவங்களைப் பெறச் செய்தல் பயனுள்ளதாகும்.

கட்புல, செவிப்புல, உபகரணங்கள், நாடகங்கள், படங்கள், நிழற்படங்கள், நாடாப்பதியி (Tape Recorder) சித்திரங்கள், மாதிரி வரைபுகள் போன்றவை அனுபவங்களைப் பெற்றுத் தரத்தக்க, அதிக பயனுள்ள கருவிகளாகும்.

**எளிய முறையில் ஆலோசனைகளைப் பெற்றுத் தரல்**

மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கு, கற்றலின் போது குறிப்பிட்டதோர் விடயம் தெளிவுபடுத்தப்பட வேண்டுமாயின் அது பற்றிய போதனைகளை மிகத் தெளிவாகவும் எளிய முறையிலும் பெற்றுத்தரல் முக்கியமாகும். இதற்காக,

சில சொற்களைக் கொண்ட எளிய வாக்கியங்களைப் பயன்படுத்தலாம்.

ஒரு தடவையில் ஒரு விடயம் தொடர்பான ஆலோசனையை மாத்திரம் வழங்கலாம்.

விளக்கமளிப்பதற்காக, குறுகியகால இடைவேளைகளைப் பயன்படுத்தல் போன்ற அடிப்படை விதிகள் மிக முக்கியமானதாகும்.

**எதிர்பார்க்கப்படும் கற்றல் நிகழ்வுகளையும், எண்ணக் கருக்களையும் எண்ணிக்கையில் குறைத்தல் (கட்டுப்படுத்தல்)**

மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்கு, ஒரு பாடவேளையின்போது கற்பிக்க எதிர்பார்க்கப்படும் கற்றல் நிகழ்வுகளின் அல்லது எண்ணக்கருக்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டதாகும். ஏனெனில், குறிப்பிட்டதோர் குறுகிய காலவேளையினுள் அதிக எண்ணிக்கையான எண்ணக்கருக்களை கற்க முயற்சிப்பதன் மூலம் மாணவர்கள் குழப்ப நிலைக்குள்ளாக்கப்படுவர். மேலும் குறுகிய காலத்தினுள், கூடிய எண்ணிக்கையான விடயங்களைக் கற்பதற்கும், அவை தொடர்பாக தமது அவதானத்தைச்


செலுத்துவதற்கும், அவ்வெண்ணக் கருக்களை தெளிவாகக் கிரகித்துக் கொள்வதற்கும் இம் மாணவருக்குத் திறன் இருக்கமாட்டாது.

* எல்லாப் பாடங்களும் முறையாகத் திட்டமிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவரின் ஆற்றல் மட்டத்திற்குத்தக்கவாறு எளிய படி முறைகளில் அறிந்தவற்றிலிருந்து அறியாத சிக்கலான விடயங்களைக் கற்றுத் தரத்தக்க வகையில், பாடங்களைத் திட்டமிடல் வேண்டும்.

படிமுறைகள் தேவையற்ற அளவில் எளிமையாக அமைதல் சிறந்ததல்ல. அதேசமயம் அடைய முடியாத அளவில் சிக்கலான படிகளைக் கொண்டதாக அமைவதும் நன்மை பயக்க வல்லதல்ல.

ஒரு படியிலிருந்து மற்றொரு படிக்குச் செல்லும்போது அவற்றிடையே சிறிய வித்தியாசம் அமையுமாறு திட்டமிடுவதன் மூலம் மாணவர் வெற்றிகரமாகக் கற்றுக் கொள்ள வழிகோல முடியும்.

**சிறந்த தரத்தில் அமைந்த கற்றல் கருவிகளை முன் வைத்தல்**



மெல்லக் கற்கும் மாணவரின் கற்றல் செயற்பாடுகளை விருத்தி செய்யும் வகையில் கற்றல் துணைச்சாதனங்கள் தயாரித்தல் அவசியம். ஆகவே இவை, எளிமையான, எளிதாகப் பயன்படுத்தக்கூடிய, மனதைக் கவரத்தக்க, சிறப்பான முடிக்கப்பட்டுள்ள கருவிகளாக அமைதல் அவசியமாகும்.

* யதார்த்த உலகின் நிலைமைகளை விளங்கிக் கொள்ளத் தக்கவாறு கற்றல் அனுபவங்கள் யதார்த்தமானவையாயும் கையாளும் உபகரணங்கள் உண்மையான உபகரணங் களாகவும் அமைதல் வேண்டும். முடிந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் உண்மையான நேரடி அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள வழிசமைத்தல் வேண்டும்.

* மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்கு புதிதாக கற்றல் உபகரணங்களைக் கையளிக்கும்போது முன்னர் அளிக்கப்பட்ட உபகரணங்களை அவர்கள் சிறப்பாகக் கையாளப் பழகிய பின்னரே அளித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத போது போதியளவில் பயிற்சியைப் பெறுதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப் பெறாமையால், சிறப்பான கற்றல் செயற்பாடுகளுக்கு தடை ஏற்படக்கூடும்.

## முன்னைய அனுபவங்களுக்கு பின்னூட்டல் அளித்தல்

நேற்று அல்லது முன்னைய தினம் கற்பித்த விடயங்களையும் சில மாணவர் மறந்து போகின்றனர். இது ஏன்? இவ்வாறு மறதி ஏற்படுவதற்கான காரணம் என்ன?

* குறுகிய கால நினைவு பலவீனமுறல்.
* மனதை ஒருமுகப்படுத்தும் திறன் குறைவாக இருத்தல்.
* அவதானிப்பு குறைவுறுதல்.
* இவ்வாறான மாணவருக்கு, பல்வேறு நிலைமைகள் அல்லது தொடர்புகள் மூலமாக திரும்பத்திரும்ப அனுபவங்களைப் பெற சந்தர்ப்பங்கள் பெற்றுத் தரப்படல் வேண்டும்.

* பாடசாலையினுள் மாத்திரமல்லாமல், பாடசாலைக்கு வெளியேயும், கற்றல் உதவி உபகரணங்களின் துணையுடன் கற்பதற்கும், செய்து பார்ப்பதற்கும், பயிற்சி பெறுவதற்கும், செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல் அவசியம்.

* அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு போதிய அளவிலான கால அவகாசத்தைப் பெற்றுக் கொடுத்தல் அவசியமாகும். உடற்பயிற்சி பாடமொன்றினைப் போன்று ஒரே விடயத்தை ஒரேவிதமாக திரும்பத் திரும்ப கற்பதற்கு வழி ஏற்படும் வகையில் பாடங்களைத் திட்டமிடல் கூடாது.

* சம வயது (ஒத்த வயது)க் கூட்டத்தினரிடமும், இடைத் தாக்கங்கள் மூலம் அவர்களிடையே கருத்துப் பரிமாற்றத்தின் மூலமும், பின்னூட்டல் பெறப்படும். இதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல் ஆசிரியர் கடமையாகும்.

## ஊக்குவிப்பதற்கு பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்தல்

மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவரிடையே, கற்றலை ஊக்குவிப்பதற்கான பல்வேறு நுட்பங்களை பயன் படுத்துவதன் மூலம், சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு பயன்படுத்தக்கூடிய ஊக்கு வித்தல் நுட்பங்கள் சில இங்கு தரப்பட்டுள்ளன. அவையாவன,

* முறையானதும், சீரானதுமான "மீளவலியுறுத்தலின் மூலம்" ஊக்குவிப்பது பிரதான வழிமுறையாகும்.

* தேவைக்கேற்றவாறு கற்றல் துணைச்சாதனங்களை மாற்றி அமைத்தல்.

* வேலை செய்யக்கூடிய மிகக் கூடிய நேரத்தை மாண வருக்கும் பயன்படுத்துதல்.

* மாணவர் விருப்புடைய செயற்பாடுகளில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்கப்படல்.

* காட்சிப் படுத்தல்கள்.

* வெற்றிகரமான அனுபவங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

* அடைவு மட்டத்தினை வளர்ச்சியுறச் செய்தல்.

**மெல்லக் கற்கும் மாணவரை ஏற்றுக் கொள்ளல்**

ஆசிரியரைப் போன்றே பெற்றோரும் இவ்வாறு மெல்லக் கற்கும் மாணவரையிட்டு அவதானத்துடன் இருத்தல் வேண்டும். அவர்களை ஏற்றுக் கொள்ளலும், அவர்களின் ஆற்றலுக்கு தக்கவாறு, நியாயமான எதிர்பார்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதும் கற்பித்தலின்போது மிக முக்கிய மானதாகும். வகுப்பறையிலுள்ள ஏனைய மாணவரும் மெல்லக் கற்கும் மாணவரை ஏற்றுக் கொள்ளல் மிகவும் அவசியமாகும். வகுப்பறையிலுள்ள மற்றைய மாணவரின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளைப் போன்றே தாமத மாகக் கற்கும் மாணவரின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளும் ஒரே அளவில் முக்கியத்துவமான வையாகும். இவ்வாறான எண்ணக்கருவினை வளர்த்துக் கொள்ளல் ஆசிரியராகிய உமது கடமையாகும்.

**அடைவு இலக்குகளை நிர்ணயித்தல்**

மெல்லக் கற்றுக்கொள்ளும் மாணவருக்கு அளிக்கப்படும் பொருள்கள், கற்றல் உபகரணங்கள் அல்லது கற்றல் சந்தர்ப்பங்கள் மிகவும் எளிமையானவையாக அமையும் போது மாணவருக்குச் சவாலாக அல்லது உந்துதலாக அமையமாட்டாது. மிகவும் கடினமானவையாக அமையு மாயின், இம்மாணவர்கள் தோல்வியையும், இதன் காரணமாக விருப்பின்மையையும் அடைவர். ஆகவே, ஒவ்வொரு மாணவனதும் உடல், உள மற்றும் மனஎழுச்சி ஆகியவற்றில் உண்டாகும் வளர்ச்சியை கவனத்தில் கொண்டு, வேலைசெய்வதற்கு ஏற்ற அடைவு இலக்குகளைத் தீர்மானித்துக்கொள்ளல் வேண்டும். மாணவரின் திறனையும், வளர்ச்சியையும் கவனத்திற் கொண்டு அதற்கேற்றவாறு, கற்றல் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல் அவசியமாகும்.

**தண்டனையும், அதன் பலாபலன்களும்**

* தமக்குத் தேவையற்றவை நடைபெறுவதைத் தடுப்பதற்காக சிலர் தண்டனைகளை அளிக்கின்றனர். மெல்லக் கற்கும் மாணவருக்கு தண்டனை அளிப்பதன் மூலம் அவர்களில்

ஏற்படக்கூடிய விளைவுகள் மிகவும் குறைவானதாகும். ஏனெனில்;

* தண்டனைகள் மூலம் செய்ய வேண்டியவை பற்றி அறிவுறுத்தப்பட மாட்டாது. (வழிகாட்டல் வழங்கப்பட மாட்டாது)
* இவை தவிர்க்கப்பட வேண்டியவை, என மாத்திரம் கற்றுத் தருவன.
* தண்டனைகள் தவறான நடத்தைகளுக்கான மீள வலியுறுத்தலாக அமையும். ஆகவே தண்டனை அளிப்ப தன் மூலம் பிழையான நடத்தை மேலும் மேலும் நடைபெற இடமுண்டு.
* அநேகமாகத் தண்டனைகளை அளிப்பதன் பயனாக விரும்பத்தகாத நடத்தைகள் தற்காலிகமாக நிறுத்தப் படக்கூடும். அதாவது தண்டனைகளின் தாக்கம் இம்மட்டத்தில் முடிவுறலாம்.
* மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்குக் கற்பிக்கும் போது தண்டனையின் பயனாக ஏற்படும் தேவையற்ற நடத்தைகள் ஏற்படாதவாறு நீங்கள் கவனமாயிருத்தல் அவசியமாகும்.

**ஆசிரியர் மாணவர் தொடர்பினை வளர்த்தல்**

விளையாட்டுத் திடலிலும், இடைவேளையிலும், பாடசாலை நேரத்தின் பின்னரும், மாணவருடன் நல்லிணக்கத்துடன் கலந்துரையாடுவதன் மூலம், அவர்களது நண்பர்கள், பெற்றோர், சகோதரர்கள், அயலில் வசிப்போர் ஆகியோரின் விருப்பு வெறுப்புகளையும், தேவைகளையும் இனங்காண்க.

பல்வேறு பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர் களைப் பற்றி கொண்டிருக்கும் மனப்பாங்குகளை கண்டறி யுங்கள்.

**பெற்றோர் ஆசிரியர் தொடர்புகளை வளர்த்தல்**

மெல்லக் கற்கும் மாணவரைப் பொறுத்தவரையில் பெற்றோர் ஆசிரியர் தொடர்பு மெல்லக் கற்கும் மாணவருக்கு மிகவும் முக்கியமானதாகும். இம் மாணவரின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக மிகச் சிறந்த பெற்றோர் ஆசிரியர்த் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். பெற்றோருடன் நட்புறவுடன் கலந்துரையாடுவதன் மூலம், அவர்களுடைய பிரச்சினை களையும், பிள்ளைகளைப் பற்றி ஏற்படுத்திக் கொள்ளும் எண்ணக்கருக்கள், எண்ணங்கள் போன்றவற்றையும் கிரகித்துக் கொள்ள முடியும். வீட்டில் கற்றல் நடவடிக்கை களுக்காக எவ்வாறு ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியுமெனக் கண்டுகொள்ள முடியும். வீட்டில், பெற்றோர்

மாணவருக்கு எவ்வகையில் உதவியாயிருத்தல் வேண்டுமென எடுத்துக்கூறல் உமது கடமையாகும்.

**மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்குப் பொறுப்புக்களை அளித்தல்**

இம்மாணவருக்குப் பொறுப்புக்களை அளிப்பதன் மூலம் அவர்களுள் தன்னம்பிக்கையை ஏற்படுத்த முடியும்.

* அவரிலும் சிறிய (வயது குறைந்த) மாணவருக்கு கற்பிப்பதற்கு சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
* அதிபரிடம், பெயர்ப் பதிவேட்டை எடுத்துச் செல்லுதல்.
* செய்திகளைக் கொண்டு செல்லுதல்.
* விளையாட்டுத் திடலில் தலைமைத்துவம் அளித்தல் போன்ற சிறு சிறு பொறுப்புக்களை அளித்தல்.

**மனதை ஒரு முகப்படுத்தும் திறனை வளர்த்தல்**

மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவரிடம் குறைவாகவே, இத்திறன் அமையும். ஆகவே இதனை வளர்ப்பதற்காகத் தக்க வழிவகைகளைக் கைக்கொள்ளல் வேண்டும்.

* நாடகம், சிறுவர் திரைப்படம், படப்புத்தகம், மாலை கோர்த்தல், ஒட்டுதல், கதை சொல்லுதல் போன்ற செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் முறையாக மனதை ஒருமுகப்படுத்தும் திறனை வளர்ச்சியுறச் செய்யலாம்.

* நேரசூசி

* நன்றாக திட்டமிடப்பட்ட நேரசூசியினை அமைத்தல் வேண்டும்.
* அமைதியாகக் கற்கும் பாடவேளைகளும், செயற்பாடுகளுடன் கற்கும் பாடவேளைகளும் எண்ணிக்கையில் சமமாக இருத்தல் வேண்டும்.
* வகுப்பறையினுள்ளும், வகுப்பறையின் வெளியிலும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடியவாறு நேரசூசியை அமைத்துக்கொள்ளல் மிக அவசியமாகும்.

**செவ்வைபார்த்தல் 1**

(1) மீளவலியுறுத்தல் என்பது,

i. கற்பதன் முன்னர் தயாராகுதல்.
ii. உளவியலாளர்களினால் பயன்படுத்தப்படுவது.
iii. நடத்தைகளை பலமுள்ளதாக்கும் விடயம் அல்லது பொருள்.
iv. செயல் ஒன்றைச் செய்து முடிப்பதற்காக அச்சுறுத்துதல்.



4- PP 1907

(ஓ) கீழ்வரும் சொற்றொடர்கள் சரியாயின் "√" எனவும், பிழையாயின் "X" எனவும் குறிப்பிடுக.

i. ஒரே வகையான மீளவலியுறுத்தல் எந்தவொரு மாணவனுக்கும் ஏற்றதாகும். [X]

ii. வேறு வகை மீளவலியுறுத்தலுடன் சமூக ரீதியான மீளவலியுறுத்தலையும் பயன்படுத்த முடியும். [√]

iii. எதிர்பார்க்கப்படும் நடத்தை வெளிப்படுத்தப் பட்டவுடன் மீளவலியுறுத்தல் நடைபெறல் வேண்டும். [√]

iv. மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவனுக்கு முன்வைக்கப்படும் கற்றல் உபகரணங்கள் மாணவனுக்கு சவாலாக அமையக்கூடாது. [√]

v. மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்காக தயாரிக்கப்படும் கற்றல் உபகரணங்கள் எதிர் பார்த்ததை விட எளிதாக அமையக்கூடாது. [X]

vi. மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவரின் குறுகிய கால நினைவாற்றல் வலுவானதாயும், அவதானிப்புக்கள் பலவீனமானவையாயும் இருக்கும். [√]

vii. மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்கு குறுகிய கால எளிய படிமுறைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்ட செயன்முறைப் பாடங்கள் அளிக்கப் படல் வேண்டும். [√]

viii. தண்டனைகளை அளிப்பதன் மூலம் சரியான நடத்தையை எதிர்பார்க்க முடியும். [X]

ix. தண்டனைகளை அளிப்பதன் மூலம் பிழையான நடத்தைகளைத் தற்காலிகமாகத் தடைப்படுத்த முடியுமெனினும், பின்னைய சந்தர்ப்பங்களில் அந்நடத்தையை திரும்ப அவதானிக்க முடியும். [√]

| உமது விடையை மொடியூலின் இறுதியிலுள்ள விடைகளுடன் ஒப்பிடுக. |
|---|

மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்கு கற்பித்தல் தொடர்பான விதிகளை கற்றுக் கொண்ட நீங்கள், தற்போது ஒருவர் சார்ந்த கற்பித்தல் முறையினை கற்கத் தயாராகும் முறையில் கீழ்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.

**செயற்பாடு 1** **படிமுறை I**

உமது பாடசாலையில் I ஆம், II ஆம் ஆண்டு மாணவருக்கு கடந்த தவணையின்போது தரப்பட்ட கணித பாட வினாப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்க.

**படிமுறை** II

மூன்றாம் ஆண்டில் கற்கும் மாணவரின் பெயர் பட்டியலைப் பெற்றுக் கொள்க.

**படிமுறை** III

3 ஆம் ஆண்டு மாணவர் முதலாம் தவணையின் போது பெற்ற புள்ளிகளின் பட்டியலையும் பெற்றுக் கொள்க.

**படிமுறை** IV

தரப்பட்டுள்ள அட்டவணையில் கடந்த தவணையின்போது 40 புள்ளிகளுக்குக் குறைவாக புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட மாணவரின் பெயர்களை எழுதிக் கொள்க.

**படிமுறை** V

மூன்றாம் ஆண்டில் முதற் தவணைப் பரீட்சையில் 40 புள்ளிகளுக்குக் குறைவாக புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட மாணவருக்கு மாத்திரம், இரண்டாம் ஆண்டு மாணவருக்கு, கடந்த தவணையின்போது கணித பாடத்திற்குத் தரப்பட்ட வினாப்பத்திரத்தை விடை எழுதுவதற்காகத் தருக.

**படிமுறை** VI

பின்னர் அம் மாணவரின் விடைப் பத்திரங்களை தரப்பட்ட புள்ளி வழங்கும் முறைக்கேற்ப புள்ளி வழங்குக.

**படிமுறை** VII

இரண்டாம் ஆண்டின் மாணவர் கணித பாடத்திற்காக பெற்றுக் கொண்டுள்ள புள்ளிகளைக் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடுக.

**படிமுறை** VIII

கணித பாடத்தில் 40 புள்ளிகளுக்குக் குறைவான புள்ளி களைப் பெற்றுக் கொண்ட இரண்டாம் ஆண்டு மாணவருக்கு கடந்த தவணையின்போது முதலாம் ஆண்டின் மாணவருக்கு அளிக்கப்பட்ட கணித வினாப் பத்திரத்தைத் தருக.

**படிமுறை** IX

அவ் விடைத்தாள்களைத் தரப்பட்ட புள்ளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் புள்ளி வழங்குக.

## படிமுறை X

முதலாம் ஆண்டின் கணித விடயத்தில் மாணவர் பெற்றுள்ள புள்ளிகளைக் கீழ்வரும் அட்டவணையில் குறிக்க.

| மாணவரின் பெயர் | I ஆம பரீட்சையில் புள்ளிகள் | II ஆம் பரீட்சையில் புள்ளிகள் | III ஆம் பரீட்சையில் புள்ளிகள் |
|---|---|---|---|
| | | | |
| 40 புள்ளிகளுக்கு குறைவாக புள்ளிகளைப் பெற்றவர் தொகை | | | |

(1) இப்போது கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. 3ஆம் ஆண்டிற் கணித மட்டத்தில் 40 புள்ளிகளுக்குக் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர் யார்?

2. இதனை வகுப்பு முழு மாணவர் தொகையின் விகிதமாகத் தருக.

3. மாணவர் பரீட்சையின்போது 40 புள்ளிகளுக்குக் குறைவாக புள்ளிகளைப் பெற்றதற்கான காரணம் யாது?

(2) 1. 2ஆம் ஆண்டு கணித பாட வினாப்பத்திரத்திற்கு 40 புள்ளிகளுக்கு குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ள மாணவரின் எண்ணிக்கை எவ்வளவு?
அவ்வெண்ணிக்கையை வகுப்பின் முழு மாணவர் தொகையின் விகிதமாகத் தருக.

2. 3ஆம் ஆண்டில் கற்றபோதும் சில மாணவர் இரண்டாம் ஆண்டின், கணித பாட வினாப் பத்திரத்திற்கு 40 இற்கு குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர். இதற்கான காரணம் என்ன?

(3) 1. 1ஆம் ஆண்டில் கணித பாடத்தில் 40 புள்ளிகளுக்கு குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர் எண்ணிக்கை எவ்வளவு? அவ்வெண்ணிக்கையை மொத்த மாணவர் தொகையினரின் விகிதமாகத் தருக.

2. 3ஆம் ஆண்டில் கற்றபோதும் 1ஆம் ஆண்டின் கணித பாடத்தில் 40 புள்ளிகளுக்கும் குறைவான புள்ளிகளையே சில மாணவர் பெற்றுள்ளனர். இதற்கான காரணங்களைத் தருக.

(4) 1. உமது பரிசோதனைகளின்படி 2ஆம், 1ஆம் ஆண்டின் செய்த கணித பாடத்தில் 40 புள்ளிகளுக்கு குறைவான

புள்ளிகளைப் பெற்ற மாணவரை கீழ்வரும் தலைப்புக்களின் கீழ் அவதானிக்க.

மதிப்பீட்டுக் குறைபாடுகள்
கட்புல குறைபாடுகள்
உடல் அங்கவீனம்
பாடசாலைக்கு வராதிருத்தல்
புத்தகங்கள்/உபகரணங்கள் இல்லாதிருத்தல்
வெளிப்படுத்தப்படும் நடத்தைசார் சிக்கல்கள்

2. நீங்கள் ஆய்ந்தறிந்த தரவுகளை அடுத்து வரும் கலந்துரையாடல் வகுப்பின்போது சமர்ப்பிக்கவும்.

## பகுதி II

# 4.0 ஆள் சார்ந்த கற்பித்தல் முறை

சாதாரண மாணவனுக்கு கற்பிக்க பயன்படுத்தும் முறைகளைக் கையாள்வதன் மூலம், மெல்லக் கற்கும் மாணவர் விடயத்தில் நற் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. வகுப்பறையிலுள்ள சகல மாணவரையும் ஒரே குழுவாக இனங் கண்டு கற்பிப்பதன் மூலம் மெல்லக் கற்கும் மாணவர் அடிக்கடி தோல்வியைப் பெறுவர். படிப்படியாக பாடசாலை வேலைகளில் அவர்களின் அக்கறையும் குறைவுறும். சில வேளைகளில் முழுப் பாடசாலைக் கல்வியையும் இடை நடுவில் நிறுத்தி விடுவர்.

ஆள்சார்ந்த கற்பித்தல் என்றால் ஒவ்வொரு மாணவனின் இயல்பு தேவை, விருப்பு வெறுப்பு ஆற்றல் பலவீனம் போன்றவற்றை அறிந்து குழுவாகப் பிரித்து அதன் தேவைக்கேற்ப கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை திட்டமிட்டு வடிவமைத்து கற்பித்தலாகும்

மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவர் தொடர்பாக கற்பிக்கும் போது ஆள் சார்ந்த கற்பித்தல் சூழலில் கற்பிக்கப்படல் வேண்டும். ஆள் சார்ந்த கற்பித்தல் சூழல் என்றால் என்ன? இதன் கருத்து ஒரு மாணவனுக்காக அதிகளவு காலத்தை ஒதுக்குவது அல்ல. ஒத்த செயற் திறனையுடைய மாணவரைக் குழுவாகக் கொண்டு சகல மாணவருக்கும் மிகவும் ஊக்கத்துடன் கற்க ஏதுவான சூழலை உண்டாக்குவதாகும்.

ஆள் சார் கற்பித்தல் முறையினை மிக எளிதான முறையில் இவ்வாறு விளக்கலாம். ஒவ்வொரு மாணவனின் இயல்பு, தேவை, விருப்பு வெறுப்பு, ஆற்றல், பலவீனம் போன்றவை தொடர்பாக தனிப்பட்ட முறையில் அவதானித்து ஒரே அளவான செயன் மட்டத்திலுள்ள மாணவரைக் குழுவாக அமைத்து அவர்களின் தேவைக்குத் தக்கவாறு கற்றல் கற்பித்தல் வேலைகளைத் திட்டமிட்டு வடிவமைத்துக் கற்பித்தலாகும்.

ஆள் சார் கற்பித்தல் முறையினை செயற்படுத்துதற்காக ஒவ்வொரு மாணவனினதும்

* புத்திசார் செயற்பாடுகள்
* ஆற்றல்கள்
* பலவீனங்கள்
* சமூகமயமாக்கல்
* இயக்கத்திறன்
* கிரகிக்கும் திறன்
* மொழி வளர்ச்சி
* விருப்பு வெறுப்பு
* நடத்தை இயல்புகள்
* ஆற்றல் மட்டங்கள்
* செயல் மட்டங்கள்
* அபிவிருத்தி மட்டங்கள்

போன்ற எல்லா விடயங்களையும் ஆராய்தல் ஒவ்வொரு மாணவன் தொடர்பாகவும் முக்கியமாகும். ஒவ்வொரு விடயத்தினையும் பற்றி தேவையான தகவல்களைச் சேகரித்துக் கொள்ளல் அவசியமாகும்.

ஒவ்வொரு மாணவன் தொடர்பாகவும் எவ்வாறு இவ் விடயங்களைச் சேகரித்துக் கொள்ள முடியும்? நீங்கள் கையாளக்கூடிய மிகவும் வசதியான முறை யாதெனின், எல்லா மாணவரையும் கவனமாக அவதானித்து மதிப்பீட்டு அறிக்கையினைத் தயாரித்துக் கொள்வதாகும். மாணவருடன் வேலை செய்வதாயின், மாணவனின் ஆற்றல் அளவினையும் திறன் மட்டத்தினையும் அறிந்து வைத்திருத்தல் அவசியமாகும். இதன் மூலம் மாணவனால் ஆற்றக் கூடியதையும் ஆற்ற முடியாததையும் அறியலாம்.

சாதாரண வகுப்பறையில் கல்வி கற்கும் மாணவரின் செயல் மட்டமும் அபிவிருத்தி மட்டமும் ஒரே விதமானது அன்று. கால வயதும், உள வயதும் மாணவனுக்கு மாணவன் வேறுபடக்கூடும். சில சமயம் பார்வை, கேட்டல், பேச்சு மற்றும் இயக்கம் போன்ற பலவீனங்களையுடைய பிள்ளைகளும் வகுப்பறையினுள் காணக்கூடும். இதனால் தாமதமாகக் கற்றுக் கொள்ளும் மாணவர்களின் கல்வித் தேவைகளை நிறைவேற்றுவது சார்பாக ஒவ்வொரு பாடத்திற்கேற்பவும், ஆற்றல் மட்டங்களை மதிப்பிட்டு மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு மாணவனினதும் ஆற்றல் மட்டங்களையும், அபிவிருத்தி மட்டங்களையும் ஒவ்வொரு குழுக்களின் தேவைகளையும் இனங்கண்டு, பாடங்களைத் திட்டமிடுவதன் மூலம் மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவர்கள் மாத்திரமல்ல, திறனுள்ள மாணவருக்கு கல்வியை வெற்றிகரமாக்கிக் கொள்ள முடியும்.

ஆள் சார் கற்பித்தல் முறையினை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்காக ஒவ்வொரு மாணவனினதும், சுய விவரக் கோவையை நடைமுறைப்படுத்துதல் அவசியமாகும். மாணவர் தொடர்பான பொதுவான விவரங்கள், மதிப்பீட்டு அறிக்கைகள், குறுகிய கால நீண்ட கால பாடத்திட்டங்கள், முன்னேற்ற அறிக்கைகள் போன்ற மாணவர் பற்றிய பல்வேறு முக்கியமான விவரங்களை இங்கு கோவைப்படுத்தி வைத்தல் அவசியமாகும்.

குறிப்பிட்ட காலத்தினுள் மாணவர் பெற்றுக் கொள்ளும் முன்னேற்றங்களை இங்கு குறிப்பிடல் வேண்டும். குறைந்தது மூன்று மாதங்களுக்கொரு முறையாவது மாணவர் பற்றியும் மொத்த முன்னேற்றம் பற்றியும் குறிப்புக்களை வைத்திருத்தல் அவசியமாகும். இதன் மூலம் குறிப்பிட்டதோர் காலத்தின் பின்னர் நீர் கையாண்ட வேலைத்திட்டம் வெற்றி பெற்றுள்ளதா இல்லையா என்பதை அறிந்து கொள்ள முடியும். பாடங்களை முறையாகத் திட்டமிடுவதற்கு மேற்படி குறிப்புக்கள் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

### செவ்வை பார்த்தல் 2

கீழ்வரும் சொற்றொடர்கள் சரியாயின் '√' எனவும், பிழையாயின் 'X' எனவும் முன்னால் உள்ள கட்டத்தில் குறிக்க.

1. சகல மாணவருக்கும் சுய விவரக் கோவைகளை நடைமுறைப்படுத்தியவாறு கற்பித்தல் ஆள்சார் கற்பித்தல் முறை என வழங்கப்படும். [ x ]

2. ஒவ்வொரு பாடத்திற்கேற்பவும் ஒரே செயற்றிறன் மட்டத்திலுள்ள மாணவரை குழுக்களாக அமைத்து சகல மாணவரையும் கற்றலில் ஈடுபட வைத்தல் ஆள் சார் கற்பித்தல் முறை என வழங்கப்படும். [ √ ]

3. ஒவ்வொரு மாணவர் சார்பாகவும் தரவுகளைச் சேகரிக்க மிகவும் சிறந்த முறை யாதெனின் கவனத்துடன் அவர்களை அவதானித்தல் ஆகும். [ √ ]

4. மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவர் சார்பாக முன்னேற்ற அறிக்கைகளை வைத்திருப்பதன் மூலம், அம் மாணவர் தொடர்பாகக் கையாண்ட முறைகளை மதிப்பிட முடியும். [ √ ]

5. ஆள் சார் கற்பித்தல் முறையினை அமுல்படுத்துவது வகுப்பறையிலுள்ள எல்லா மாணவரும் சமமான செயல்திறன் மட்டத்தில் இருப்பதாலாகும். [ √ ]

உமது விடைகளை மொடியூலின் இறுதியிலுள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

6. குறிப்பிட்டதோர் வகுப்பறையின் மாணவர்கள் சார்பாக ஒரே பாடவேளையினுள் பல்வேறு வேலைத் திட்டங்களை ஒழுங்கமைப்பதன் மூலம் காலமும் முயற்சியும் வீணாகும்.

பகுதி III

## 5.0 வேலைப்பகுப்பு என்றால் என்ன ?

மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்கு கற்பிக்கும் போது,விஷேட பலனைத் தரும் வேலைப்பகுப்புத் தொடர்பாக உமது கவனத்தை இப்பகுதியில் செலுத்தவும்.

"கற்றல் வேலைகளின் பகுதிகள் அல்லது கற்றல் நடவடிக்கைகள் நடைபெறுவதற்காக, அதன் முன்னர் தேவைப்படும் சிறுசிறு பகுதி வேலைகளை ஒன்றன் பின் ஒன்றாய் கற்றுக் கொள்வர். பின்னர் இறுதியில் எதிர் பார்க்கப்படும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளத் தக்கவாறு ஒழுங்கமைப்பர். இவற்றைக் கற்றல் தொடர்பான சிக்கல்களினால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் நுழையும் ஒரு படி என இனங் காண முடியும்." இவ்வாறு வேலைப்பகுப்பு என்னும் எண்ணக் கருவினை கலிகொஸ், பீலன் (GALLEGOS), (PHELAN) என்போர் கருத்தறிவித்துள்ளனர்.

இதன்படி வேலைப்பகுப்பு என்பதனால் கருதப்படுவது யாதெனின், அவ்வெண்ணக் கருத்தினை, படி முறைக்கேற்ப பகுத்து வடிவமைக்கப்பட்ட சிறு சிறு வேலைப் பகுதிகளைத் திருப்திகரமாக நிறைவேற்றுவதன் மூலம் இறுதி வேலைக்காக முனைப்படுத்துவதற்கு ஏற்ற வகையில், ஒழுங்கமைத்தலாகும். இது கற்றல் சிக்கல் களினால் பாதிப்புற்றுள்ள மாணவனின் கற்றல் கற்பித்தல் வேலைகளில் உட்புகும் ஒரு படிமுறை ஆகும்.

மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவன் சார்பாக கற்றல் கற்பித்தல் வேலைகளை ஒழுங்கமைக்கும்போது, வேலை பகுப்பு ஏன் செய்தல் வேண்டும் ?

* மாணவனின் நடத்தை இயல்பை இனங்கண்ட பின்னர், குறிப்பிட்டதொரு முறைக்கேற்ப நடத்தைகளை ஒழுங்க மைப்பதற்கு.

* குறிப்பிட்டதொரு செயலில் ஈடுபட்டுள்ளபோது நடந்து கொள்ளும் முறையினை இனங்காணுதற்கு.

* பெற்றுத் தர வேண்டிய ஆற்றல்களை இனங்கண்டு தக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கு.

இப்போது நாம் கீழ்வரும் உதாரணத்தை அவதானிப் போம்.

"கதவைத் திறத்தல்" என்பது மிக எளிதான ஒரு செயலா கும். எவருக்கும் இச் செயலை வேலைப் பகுப்பின்றி செய்ய முடியும், என ஒருவர் சிந்திக்கக்கூடும்.

அவ்வாறு முடியுமா ?

கதவைத் திறப்பதற்காக,

* கதவு என்றால் என்ன ?
* கதவைத் திறக்கும்போது பயன்படுத்தும் குறியீடு அல்லது சமிக்கை எது ?
* கதவைத் திறக்கும்போது கையுடன் தொடர்புடைய செயல்கள் எவை ?
* கதவுப்பிடியின் வகை.
* பிடியினை (குமிழை) திருப்ப வேண்டியது வலஞ் சுழியாகவா இடஞ்சுழியாகவா ?
* பொதுவாகக் கதவை எவ்வாறு திறப்பது ?

போன்ற பல வினாக்களுக்கு விடை காண வேண்டும். மேற் குறிப்பிடப்பட்ட உதாரணத்தை நோக்கும்போது மிகவும் எளிய செயல் ஒன்றைப் புரியும்போதும் அது தொடர்பான பல சிறுசிறு வேலைகளைச் செய்ய வேண்டுமெனவும், எடுக்க வேண்டிய தீர்மானங்கள் பல உள்ளன என்றும் நீங்கள் தெளிவாக விளங்கிக் கொள்வீர்கள்.

மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்காக கற்றல் கற்பித்தல் வேலைகள் ஒழுங்கமைக்கப்படும்போது,

* புதிதான எண்ணக்கருவினை அறிமுகப்படுத்துவதற் காகத் தேவையான அறிவு, மனப்பாங்கு, திறன் ஆகிய வற்றை இனங்காணுவதற்காகவும்,
* குறிப்பிட்டதொரு செயலைச் செய்ய வேண்டிய படி முறையினைக் கண்டுபிடிப்பதற்காகவும், வேலைப் பகுப்பினை செய்யவேண்டி இருக்கும்.

**வேலைப் பகுப்பினை புரிவது எவ்வாறு ?**

* வேலைப்பகுப்பின் முக்கிய 4 பகுதிகள் உண்டு.

1. இறுதி வேலை பற்றி விரிவாக எழுதுதல்.
2. அனுமானித்தல்.
3. வேலைகளைப் பிரித்து எழுதுதல்.
4. பொதுமயமாக்கல்.

இப்போது கீழ்வரும் வெட்டுமுகத்தை ஆராய்ந்து வேலைப் பகுப்பு எனும் எண்ணக்கருவினை விளங்கிக் கொள்ள முயல்வோம்.

| |
|---|
| மாலாவின் வயது 6. அவள் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்கின்றாள். பென்சிலை முறையாகப் பிடித்து எழுத இன்னும் அவளால் முடியாது. அவளது நுண்ணிய, எளிய இயக்கத்திறன்கள் தேவையான அளவில் இன்னும் வளர்ச்சியுறவில்லை. நடத்தைச் சிக்கல்கள் இல்லாத போதிலும், அவள் தாமதமாகக் கற்றுக் கொள்ளும் ஒரு மாணவியாகும். அவளது தாயார் அவளுக்கு எழுத முடியா திருப்பது குறித்து மிகவும் கவலையுற்றுள்ளாள். பாட சாலை நேரத்தின் பின்னர் மேலதிக வகுப்புகளுக்கு மாலாவை அனுப்பியபோதும் அவள் இன்னும் தேவை யான முன்னேற்றத்தைப் பெறவில்லை. எவ்வாறாயினும் மாலாவின் தாயாரின் நோக்கம் "மாலா" என அவளது பெயரையாவது அவளே எழுதும் திறனைப் பெற்றுக் கொடுத்தலாகும். |

தனது பெயரை எழுதும் திறனை மாலாவுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக எவ்வகையில் வேலைப்பகுப்பினை செய்தல் வேண்டும் என இப்போது பரீட்சிப்போம்.

I. இறுதிச்செயல் பற்றிய விபரம்.

(தனது பெயரை எழுதும் திறனை மாலாவுக்குப் பெற்றுக் கொடுத்தல்)

II. அனுமானித்தல்.

களிமண் பிசைதல், களிமண்ணினால் உருண்டை தயாரித்தல், கடதாசியைக் கிழித்தல், சுயாதீனமாக மணலில் விளையாடுதல் போன்ற திறன்களை உடையவள் மாலா என அனுமானித்தல்.

III. வேலைகளைப் பகுத்து எழுதுதல்.

i. களிமண்ணுடன் பல்வேறு செயல்களில் ஈடுபடல்.
ii. மணலில் சுயாதீனமாகச் செயற்படல்.
iii. பத்திரிகைத் தாள்களைப் பயன்படுத்தி பல்வேறு செயல்களில் ஈடுபடல்.
iv. பலவகைப் பொருட்களின் படங்களை ஒட்டுவது தொடர்பான செயற்பாடுகள்.
v. கத்தரிக்கோலை வெட்டுவதற்குப் பயன்படுத்தல்.
vi. பலவகை உபகரணங்களைப் பயன்படுத்தி செயல் படல்.
vii. பலவகை செயற்பாடுகளுக்காக நீரைப் பயன் படுத்தல்.

viii. மணல் வீடு கட்டுதல் மற்றும் மணல் வீட்டினுள் விளையாடும் செயல்கள்.
ix. பொருள்கள், உபகரணங்கள், மிருகங்கள் போன்ற வற்றை இனங்காணல்.
x. பொருள்கள், உபகரணங்கள், விலங்குகள் போன்ற வற்றின் படங்களை அவதானித்து அவற்றை இனங் காணல். அவற்றிடையே காணப்படும் வேறுபாடு களையும், ஒத்த இயல்புகளையும் இனங்காணல்.
xi. சுயாதீனமாகக் கீறுதல் (கிறுக்கல்).
xii. குறிப்பிட்ட வரம்பினுள் (தரப்பட்ட உருவத்தினுள்) நிறந் தீட்டுதல்.
xiii. இடமிருந்து வலமாக ஒரே சீராக அமையாத கோடு களை வரைதல்.
xiv. நிலைக்குத்து முகமாக கோடுகளை வரைதல்.
xv. வளைவான கோடுகளை வரைதல்.
xvi. அடிப்படை உருவங்களைப் பிரதி பண்ணுதல்.
xvii. தயாரிக்கப்பட்ட எழுத்துக்களுடன் செயற்பாடுகள்.
xviii. பழக்கமான கையினால் எளிய எழுத்துக்களை எழுதுதல்.
xix. "அரவை" ச் சேர்த்து எழுத்துக்களை எழுதுதல்.
xx. "மாலா" எனும் பெயரை எழுதுதல்.

IV. பொதுமயமாக்கல்.

"அரவை" ச் சேர்த்து வேறு சொற்களை/ பெயரை எழுதுதல்.

உதாரணத்திற்கேற்ப மாலா எனும் சொல்லை எழுதுதற்காக எவ்வாறு வேலை பகுப்பினைச் செய்தல் வேண்டும் என விளங்கிக் கொண்டிருப்பீர் என நினைக் கின்றேன். இறுதி வேலை பற்றிய விவரங்களைத் தெளிவாகத் திட்டமாக எழுதியதன் பின்பு வேலை களைப் பகுத்து எழுதுதல் இலகுவாகும்.

வேலைப்பகுப்பு என்பதன் மூலம், கருதுவது யாதெ னில் ஒவ்வொரு சிறுசிறு வேலையின் மூலமும் இறுதி வேலையை நோக்கி எளிதாக நெருங்கக் கூடியதாய் இருத்தல் வேண்டும் என்பதாகும்.

மேற்குறிப்பிட்ட உதாரணத்தின் மூலம், இவ்வாறு தயாரிக்கப்படும் ஒவ்வொரு சிறு வேலையையும், வெற்றிகரமாக முடிப்பதற்காக பல படிமுறைகள் தேவையாகுமென விளங்கிக் கொள்ளலாம். இவ்வாறு ஒவ்வொரு சிறுசிறு வேலையையும், பகுத்து, எழுதி யதன் பின்னர், சகல சிறு வேலைகளையும், திரும் பவும் பகுத்துத் தயாரித்துக் கொள்ளல் மிகவும் அவ சியமாகும்.

V. சிறு வேலையாக மேற்படி உதாரணத்தில் குறிப்பிட்ட கத்தரிக்கோலினால் வெட்டுதலைப் பழகுதலுக்காக,

1. கத்தரிக்கோலை அறிமுகப்படுத்தல்.

2. கத்தரிக்கோலைப் பிடிப்பதற்காகப் பழக்குதல்.

3. தாளின் முனைகளைக் கத்தரித்தல்.

4. கீறப்பட்ட குறுகிய கிடையான கோட்டின் மேலாக கத்தரித்தல்.

5. கீறப்பட்ட குறுகிய நிலைக்குத்தான கோட்டின் மேலாகக் கத்தரித்தல்.

6. கோடில்லாமல் கிடையாக வெட்டுதல்.

7. வடிவங்களை நிர்மாணிக்கும் வகையில் வெட்டுதல்.

8. துணித் துண்டுகளை வெட்டுதல்.

போன்ற உப படிமுறைகளை தீர்மானிக்க வேண்டி ஏற்படும். இவ்வாறு சிறு வேலைகளைப் பகுத்து, படிமுறைகளை ஏற்படுத்துதல், சிறு வேலைகளைப் பகுத்தல் எனப்படும். இந்த சிறு வேலைகளை 20 படிமுறைகளாக ஒவ்வொரு மாணவனினதும் திறன் மட்டங்களுக்கேற்பத் தீர்மானிப்பதன் மூலம் தாமதமாகக் கற்றுக் கொள்ளும் மாணவனின் கற்றல் வேலைகளை மிகவும் பயனுள்ளதாக ஆக்க முடியும்.

**செவ்வைபார்த்தல் 3**

(1) வேலைப்பகுப்பின் பின் பெறக்கூடிய 5 பயன்களை எழுதுக.

(2) வேலைப் பகுப்பு என்பதன் மூலம் கருதப்படுவது என்ன ?

(3) வேலைப்பகுப்பின்போது பயன்படுத்தப்படும் அடிப்படை விதிகள் யாவை ?

உமது விடைகளை மொடியூலின் இறுதியிலுள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

# 6.0 பொழிப்பு

இம்மொடியூலில் தரப்பட்டுள்ள பாடப்பரப்பினை உமது பயன் கருதி இவ்வாறு சுருக்கித் தருகின்றோம்.

மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவனின் கற்றல் செயற்பாடுகள் பயனுறுதியுள்ள வகையில் அமையுமாறு மீள வலியுறுத்தல்களையும், ஊக்குவித்தல்களையும், முறையாகவும் மிக ஒழுங்கான முறையிலும் ஒழுங்கமைத்து சமர்ப்பித்தல் அவசியமாகும்.

தண்டனைகளை அளிப்பதன் மூலம் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் வெற்றிகரமான பயன்களைப் பெற்றுக் கொள்ளுதல் கடினமாகும்.

ஒவ்வொரு பாடத்திற்கேற்ப திறன் மட்டங்களைத் தீர்மானித்ததன் பின்னர் அம்மட்டங்களுக்கேற்ப மாணவரை குழுக்களாகப் பிரித்து கற்றல், கற்பித்தல் செயல்களை ஒழுங்கமைப்பதன் மூலம் சகல மாணவரையும் ஊக்கத்துடன் பாடவேளைகளில் கலந்துகொள்ளச் செய்ய முடியும்.

அடிக்கடி பெறும் தோல்விகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக, அன்றாட பாடத்திட்டமிடல், குறுகிய கால, நீண்ட கால நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கமைத்தல் வேண்டும்.

மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்கு கற்பிக்கும் போது வாய்மூலப் போதனைகளும், விளக்கங்களும் போதுமானவை அல்ல. குறிப்பிட்டதோர் செயற்பாட்டினைப் புரியும் விதம், அதே விதத்தில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்கு போதியளவு அனுபவங்களைத் தொடர்ச்சியாக பெற்றுத் தருவோமாயின், அவர் கூடிய விளக்கத்தினைப் பெறுவர்.

குறிப்பிட்ட ஒரு பாடவேளையின் போது கற்றுத் தர எதிர்பார்க்கப்படும் எண்ணக்கருக்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படல் வேண்டும். ஓர் எண்ணக்கரு மிகவும் நன்றாக மனதில் பதிந்ததன் பின்னரே மற்றோர் எண்ணக்கரு அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.

வேலைப் பகுப்பு முறை மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்கு கற்பித்தலின்போது மிக்க பயனை அளிப்பதாக அமையும்.

## 7.0 பிற்சோதனை

கீழ்வரும் சொற்றொடர்கள் சரியானவையாயின் '√' எனவும் பிழையானவையாயின் 'X' எனவும் குறிப்பிடுக.

(i) மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்கு மிகுந்த பலனை அளிக்கும் கற்பித்தல் முறைகளாவன போதனை முறை, கலந்துரையாடல் முறை என்பன வாகும்.

(ii) மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்கு கற்பிக்கும் போது அளிக்கப்படும் ஒரு தூண்டலின் விளைவாக ஒரு துலங்கலை மட்டுமே எதிர்பார்க்க முடியும்.

(iii) மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்கு குறிப் பிட்டதோர் பாடவேளையின்போது கற்பிக்க எதிர் பார்க்கப்படும் எண்ணக்கருக்களின் எண்ணிக்கை மட்டுப் படுத்தப்படல் வேண்டும்.

(iv) இம் மாணவர்கள் கற்றலின்போது செய்யும் தவறு களுக்காக அளிக்கப்படும் தண்டனைகள் பயனு டைய வையாகும்.

(v) ஆள் சார் கற்பித்தல் முறை பொதுவாக வகுப் பறையின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக் காக பயன்படுத்துதல் சிரமமானதாகும்.

(vi) ஆள் சார் கற்பித்தல் முறையினை கையாளும் போது ஒவ்வொரு மாணவனதும் விவரங்களையும் தேடிக் கொள்ளத்தக்க மிகவும் இலேசான வழி அவதா னித்தலாகும்.

2. கீழ்வரும் வாக்கியங்களுள் மிகவும் சரியான விடையின் கீழ் கோடிடுக.

கற்பித்தலின்போது ஆள் சார் கற்பித்தல் முறையினை கைக் கொள்ள வேண்டுவது,

(i) வகுப்பறையிலுள்ள மாணவர் எண்ணிக்கையில் அதிகமாவதால் .

(ii) பாட செயற்பாடுகளுக்காக மாணவர் குழுக்களை அமைக்காதிருத்தலால்.

(iii) வகுப்பறையினுள் பல்வேறு மட்ட மாணவர்கள் இருப்பதால்.

(iv) குறிப்பிட்ட கலைத்திட்டத்தை ஒரு வருடத்தினுள் நிறைவுபடுத்த வேண்டியதால்.

3. வேலைப்பகுப்பு செயற்பாட்டின்போது அடங்கும் முக்கிய இரு காரணிகள்,

(i) ஊக்குவித்தலும், மீள வலியுறுத்தலும்.
(ii) பொதுமயமாக்குதலும், செய்முறைக் கற்பித்தலும்.
(iii) படிமுறைப் பகுப்பும், இறுதி வேலை பற்றிய விவரத்தை எழுதுதலும்.
(iv) தண்டனைகளை அளிக்காதிருத்தலும், ஊக்கப்படுத்துதலும்.

4. மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்கு வேலைகளைப் பகுத்துக் கற்பித்தல் அவசியமாவது,

(i) எளிய படிமுறைகளில் கற்பிக்கக் கூடுமாகையால்.
(ii) இம்மாணவர்கள் சீக்கிரம் கோபமுறுவதால்.
(iii) பரந்த கலைத்திட்டமாகையால்.
(iv) புதியதொரு கற்பித்தல் நுட்பமாய் அமைவதால்.

இப்போது நீங்கள் இம்மொடியூலைக் கற்றுமுடித்துள்ளீர்கள். இதனை நீங்கள் திருப்தியாகக் கற்றுமுடித்துள்ளீர்களா என்பது கீழ்வரும் ஒப்படைக்கு நீங்கள் சமர்ப்பிக்கும் விடையிலிருந்தே தீர்மானிக்கப்படுகிறது. ஒப்படை கீழே தரப்படுகிறது. அதற்கான விடையை எழுதித் தொலைக்கல்விக் கிளைக்கு அனுப்புங்கள்.

## 8.0 ஒப்படை

1.1 மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவருக்கு கற்றல் நிலைகளைப் பெற்றுக் கொடுக்கும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய 8 விதிமுறைகளைப் பெயரிடுக.

1.2 மெல்லக் கற்றுக் கொள்ளும் மாணவன் கற்கும்போது மேற்படி விதிகள் எவ்வாறு பயன்படுமெனக் கலந்துரையாடுக.

2.0 நீங்கள் கற்பிக்கும் ஏதாவதொரு வகுப்பிலும் குறிப்பிட்டதொரு பாடத்துடன் தொடர்புடைய ஏதாவதோர் எண்ணக்கருவினை கற்பிப்பதற்காக வேலைப் பகுப்பினைப் பயன்படுத்தும் முறையினைப் படி முறைகளின் மூலம் தெளிவாக்குக.

உமது விளக்கத்தினை கீழ்வரும் தலைப்பின் கீழ் சமர்ப்பிக்க.

* இறுதி வேலை பற்றிய விவரம்
* அனுமானித்தல்
* வேலைகளைப் பகுத்தெழுதுதல்
* சிறுவேலைகளைப் பகுத்தல்
* பொதுமையாக்கல்

# 9.0 விடைகள்

**முற்சோதனை**

(1) ii
(2) iv
(3) i
(4) iii
(5) iv

**செவ்வை பார்த்தல் 1**

(1) iii
(2) i
ii
iii
iv
v
vi
vii
viii
ix

**செவ்வை பார்த்தல் 2**

(1) X
(2) √
(3) √
(4) √
(5) X
(6) X

**செவ்வை பார்த்தல் 3**

(1) I. நடத்தைகளை ஒழுங்கமைக்க முடியும்.

II. செயல் ஒன்றில் ஈடுபட்டுள்ளபோது நடந்து கொள்ளும் முறையை இனங்காணல்.

III. பெற்றுத்தர வேண்டிய திறன்களை வெவ்வேறாக இனங்கண்டு தக்க நடவடிக்கைகளை எடுத்தல் இலகுவாகும்.

IV. புதிய எண்ணக்கருக்களை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு ஆகிய வற்றை இனங்காணல்.

V. செயல் எதனையும் கற்பிக்க தேவை ஏற்படும்போது அதற்கான படிமுறையினை அமைக்க வேண்டிய ஒழுங்கினை அறிதல்.

(2) எண்ணக்கரு ஒன்றை கற்பிப்பதற்கு முன்னர், அவ் வெண்ணக்கருவினை பகுத்தாய்ந்து, படிமுறை யொன்றிற்கேற்ப தயாரித்துக் கொண்ட சிறு சிறு வேலைகளை ஒவ்வொன்றாகத் திருப்திகரமாக நிறைவேற்றுவதனால், இறுதிச் செயலை நோக்கிச் செல்லத்தக்கவாறு ஒழுங்கமைத்தல். இதனைக் கற்றல் சிக்கல்களினால் பாதிப்புற்றுள்ள மாணவன் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டினுள் உட்புகும் ஒரு படிமுறையாக இனங்காணல்.

(3) I. இறுதிச் செயல் பற்றிய விவரத்தை எழுதுதல்
II. அனுமானித்தல்
III. வேலைப் பகுப்பு
IV. பொதுமையாக்கல்

**பிற்சோதனை** (1) i X
ii √
iii √
iv X
v X
vi √

(2) (iii) (3) (iii) (4) (i)

## 10.0 அனுபந்தம்

**மதிப்பீட்டுக் கேள்விக்கொத்து**

பாடசாலையின் பெயர் :-

மாணவனின் பெயர் :-

பால் :-

பிறந்த திகதி :-

வயது : ......... ஆண்டு : ......... மாதம் : .........

மதிப்பீட்டுத் தினம் :-

பரிசோதித்தவரின் பெயர் :-

சிறுவரின் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு, சிறுவரின் ஆற்றல் மட்டங்களுக்கேற்ப ஆள்சார் வேலைத் திட்டமொன்றை அமைப்பதற்கு இம்மதிப்பீட்டுப் பத்திரம் பயனுள்ளதாகும்.

**மதிப்பீடு**

1. கேள்விக்கொத்தினை சிறுவருக்கும் பெற்றோருக்கும் முன்வைக்க.

2. **மதிப்பீட்டுப் பரிசோதனை**

ஆழ்ந்த ஒலியினை ஏற்படுத்துக.

(அ) சிறுவன் ஒலி வரும் திசையை நோக்கித் தலையைத் திருப்புகின்றானா அல்லது வேறொரு துலங்கலை காட்டுகின்றானா ? (பரீட்சிக்க)

(ஆ) சிறுவன் வேறொரு செயலில் ஈடுபடும் சமயம், உரத்த, மெல்லிய ஒலியொன்றுக்காக தலையைத் திருப்புவதனால் அல்லது வேறு முறையினால் துலங்கலைக் காட்டுகின்றானா ?

(இ) 4 வயது அல்லது கூடிய வயது மாணவனைப் பரீட்சிக்கும்போது, மாணவனின் பின்னால் பல்வேறு தூரங்களில் நின்றபடி. மெதுவான குரலில் சில இலக்கங்களை அல்லது சொற்களைக் கூறுக.

செவிப்புலனில் பலவீனத்தை இனங் காண முடியுமாயின் மாணவனைத் தக்க வைத்தியரிடம் அனுப்பி வைக்க.

(3) கட்புல (பார்வை) பரிசோதனை

(அ) கண்களின் எதிரில் அங்கிங்காக கொண்டு செல்லும், மின்சூள் ஒன்றிற்கேற்ப கண்களையும் அங்கிங்காக கொண்டு செல்ல முடியுமா ?

(ஆ) மாணவன் ஒளியுள்ள இடத்தில் நிற்கும் போது கண்களைச் சுருக்குகின்றானா ?

(இ) பளபளக்கும் பொருளொன்று கண்களின் முன்னால் அசையும்போது மாணவனினால் அதனைத் தாங்கிக் கொள்ள முடிகின்றதா ? மாணவனின் முன்பாக நிலத்தில் போடப்பட்ட சிறு பொருளொன்றை மாணவனினால் பொறுக்கிக் கொள்ள முடிகின்றதா ?

(ஈ) பளபளக்கும் மணிகளைப் பொறுக்கிக் கொள்ள முடியுமா ?

பார்வை தொடர்பான பரிசோதனைகளுக்காக, பயன்படுத்திய செயற்பாடுகளையும், தூரங்களையும், மதிப்பிடுக. பார்வை தொடர்பான பலவீனங்கள் அவதானிக்கப்படும் போது வைத்தியரை நாடச் செய்யுங்கள்.

(4) இயக்கத்திறன்கள் தொடர்பான பரிசோதனை

பொதுவான மாணவனின் இயக்கத் திறனை வளர்ப்பது தொடர்பான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துக.

நிலத்தில் ஊர்ந்து செல்லும்போது தலையையும், நெஞ்சையும் நிலத்திற்கு மேலாக உயர்த்த முடியும். தனது தலையைத் தானே உயர்த்திக் கொள்வர். உதவியின்றி மறு பக்கத்திற்குத் திரும்புவர்.

விழுந்து விடாமல் தானே (தன்னிச்சையாக) நிலத்தில் அமர்வர்.

உதவியின்றி எழுந்து நிற்பர்.
உதவியின்றி சில அடிகள் நடப்பர்.
உதவியின்றி நடப்பர்.
உதவியின்றிப் பாய்வர்.
பெரிய பந்து ஒன்றைப் பிடிப்பர்.
சிறிது ஓடுவர்.
சிறிது நேரம் ஒற்றைக் காலில் நிற்பர்.
ஒற்றைக் காலில் நீண்ட நேரம் நிற்பர்.

## 4.1 இயக்கத்திறன் பற்றிய பரிசோதனை

படிகளில் ஏறும் போது ஒரே படியில் இரண்டு கால்களையும் வைத்து ஏறுவர்.

படிகளில் கீழ் இறங்கும்போதும் ஒரே படியில் இரு கால்களையும் வைத்தபடி இறங்குவர்.

யாதாயினும் ஒரு வகை உபகரணத்தைப் பயன்படுத்திய வாறு ஏறுவர், இறங்குவர்.

ஒருபடியில் ஒரு காலை வைத்து ஏறுவர்.

ஒருபடியில் ஒரு காலை வைத்து இறங்குவர்.

அயலவரின் வீடுகளுக்கும், அண்மித்த இடங்களுக்கும், வீட்டின் வெளியே விளையாடும்போது மேற்பார்வை, அவசியப்படமாட்டாது. அதிகமாக மேற்பார்வை இன்றியே சுற்றாடலில் சுற்றித் திரிவர். மேற்பார்வை இன்றி அயலவரின் வீடுகளுக்குச் சென்ற போதும், தெருவைக் கடக்க மாட்டார்கள்.

மேற்பார்வை இன்றி அயலவரின் வீடுகளுக்கு செல்கின்ற அதே சமயம் தெருவையும் கடப்பர்.

நிலத்தில் சிந்தாமல் உணவருந்துவர்.

குடிபானம் வைக்கப்பட்டுள்ள தட்டை எடுத்துக் கொண்டு அறையினூடாகச் செல்வர்.

பொது வாகனங்களில் தடையின்றி ஏறி இறங்குவர்.

பஸ்வண்டியில் அல்லது புகையிரதத்தில் ஏறும் போது பாதையின் சரியான பக்கத்தையும் சரியான மேடையையும் கண்டு கொள்வர்.

பொதுப் பாதைகளில் பயணம் செய்யும் போது பொலிஸ் அதிகாரிகளையும், சமிக்கை பலகைகளினால் தரப்படும் போக்குவரத்து சமிக்கைகளையும் இனங்காணுவர். அவற்றின் கருத்துக்களை விளங்கிக் கொள்வர்.

### உணவு உண்ணும் பழக்கம்

உதவியின்றித் தனியாக உணவு உண்பர்.

நீர்ப் பாத்திரத்தை ஒரு கையால் பிடித்தவண்ணம், நீரைச் சிந்தாமல் பருகுவர்.

தனக்குத்தானே உணவைப் பங்கிட்டுக் கொள்ளும் அதே சமயம், அதிக உதவியின்றி உணவை உட்கொள்வர்.

பானங்களைப் பாத்திரத்தில் நிரப்பி எடுத்துப் பருகுவர்.

தனது உணவை உட்கொள்ளும் சமயத்தில் தனக்குத் தேவையான அளவில் பங்கிட்டுக் கொள்வர்.

உணவு வகைகளைத் தமக்கருகில் தருமாறு கேட்டுக் கொள்வர்.

உதவியின்றி தமக்குத் தேவையான அளவில் உணவை உட்கொள்வர்.

உணவு உட்கொள்வதற்கு முன்னர், உத்தரவின்றியே தனது கைகளை கழுவிக் கொள்வர்.

உணவு உட்கொண்டதன் பின்னரும் கைகளைக் கழுவிக் கொள்வர்.

**மலசலம் கழித்தலும், சுத்தம் செய்தலும்**

மலகூடத்திற்குச் செல்வதற்கு அறிவுறுத்த வேண்டும்.

மலம் கழித்த பின்னர் தாமே தனியாகச் சுத்தப்படுத்திக் கொள்வர்.

மலங் கழித்த பின் தமது கைகளைச் சுத்தப்படுத்திக் கொள்வர்.

சுத்தமாகத் தமது முகத்தைக் கழுவிக் கொள்வர்.

அதிக உதவியின்றி போதியளவில் தமது உடலைத் தாமே சுத்தப்படுத்திக் கொள்வர்.

உடலைச் சுத்தப்படுத்துவதற்கு தேவையானவற்றைத் தயாரித்துக் கொள்வர்.

தேவையான அளவில் தமது தலைமயிரை சுத்தமாக கழுவிக் கொள்வர்.

நினைவூட்டப்படாத போதிலும், கைகளையும் முகத்தையும் போதுமான அளவில் சுத்தமாக வைத்துக்கொள்வர்.

தேவையானபோது தமது அழுக்கான ஆடைகளை களைந்து சுத்தமான ஆடைகளை அணிந்து கொள்வர்.

**உடை உடுத்தல்**

உடை அணியும் போது உதவி தேவைப்படும். தனது உடைகளை அகற்றி இலகுவான ஆடைகளை உடுத்துக் கொள்வர்.

உடைகளின் பொத்தான்களைக் கழட்டுவர். உடையை அகற்றுவர்.

தனது உடைகளை தனது உடலுக்கு ஏற்றவாறு தயாரித்துக் கொள்வர்.

மேற்பார்வையின் கீழ் இரவு உடையை அகற்றுவர்.

மேற்பார்வையின் கீழ் காலை உடையை அணிவர்.

உதவியின்றி உடையை அணிவர்.

சுத்தமான உடையை அணிவர்.

பகல் நேரத்தில் தனது உடை பற்றி தேவையான அளவு அக்கறையுடனிருப்பர். அதே சமயம் கூடியவரை அவற்றைச் சுத்தமாக வைத்திருப்பர்.

உடையை அகற்றும் போது அவை தொடர்பாக கூடிய வரையில் அக்கறையுடன் செயற்படுவர். அவற்றை மடித்துத் தொங்க விடுவர்.

**வீட்டு வேலைகளைச் செய்து கொள்ளல்**

கேட்டுக் கொண்ட போது பொருள்களை எடுத்து வருவர் சுயமாகவும் எடுத்து வருவர். மேசையை அகற்றுதல், வீ

டைக் கூட்டுதல் என்ற வகையிலான வீட்டு வேலைகளில் உதவுவர்.

சிறு சிறு வேலைகளுக்காக வீட்டின் வெளியே செல்வர்.

மூத்தவர் ஒருவர் வெளியில் நிற்கும்போது கடையினுள் போய் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுவர்.

வேலைகளின்போது பணத்தை கையாள சந்தர்ப்பம் தரப்படும்.

கடையொன்றுக்குச் சென்று தேவையான பொருட்களை பணம் கொடுத்து வாங்குவர்.

சிறு சிறு பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வர்.

பல்வேறு பொருள்களை வாங்கி வருவதற்காக கடைகளுக்குச் செல்வதன் மூலம் வீட்டு வேலைகளில் உதவுவர்.

நீரைக் கொண்டு வருவது போன்ற அன்றாட சிறு சிறு வேலைகளை மேற்பார்வையின்றிப் புரிவர்.

சிறுசிறு செயல்களை தன்னிச்சையாகப் புரிவர்.

உணவுத் தட்டுக்களை தக்கவாறு சுத்தப்படுத்துவர்.

காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் படுக்கையை முறையாக அடுக்கி வைப்பர்.

தனது கடமைகளை முடித்தபின் நினைவுறுத்தப்படாத போதிலும், தானே சுத்தமாக்குவர்.

சிறுசிறு பொருட்களை வாங்குவர். பொருட்களை வாங்குவதற்கு தகுந்த கடைகளைத் தெரிந்தெடுப்பர்.

தெரிந்தெடுக்கும்போது தனக்குத் தேவையானவற்றை தேர்ந்தெடுத்துக் கொள்வர்.

ஒரு பொருளை வாங்கும்போது அதற்கான பணத்தைக் கொடுப்பர்.

அதிகமாகப் பாவனையிலுள்ள உணவுப் பொருள்களின் விலை பற்றி அறிந்து வைத்திருப்பர்.

மொழி

சாதாரண மாணவனின் மொழி வளர்ச்சி அடிப்படையை பயன்படுத்திக் கொள்க.

தன்னால் ஏற்படுத்தும் ஒலிகளுக்கு ஏற்ப பதில் அளிப்பர்.

குரலைப் பிரதிபலிப்பர்.

தாம் சொல்வதை பற்றி அறிந்திருப்பர்.

மற்றவர் கூறும் எளிய சொற்களை விளங்கியிருப்பர்.

சிறுசிறு கட்டளைகளை ஏற்று நடப்பர்.

உள், பின், கீழ், மேல், முன்னால், மேலால், கீழால் எனும் சொற்கள் உள்ளடங்கிய கட்டளைகளை விளங்கிக் கொள்வர்.

தமது அனுபவம் பற்றி தெளிவான முறையில் விவரிப்பர்.

பன்மைச் சொற்கள், இறந்த காலச் சொற்கள் ஆகியவை உள்ளடங்கிய வாக்கியங்களை விளங்கிக் கொள்வர்.

சிறுசிறு சொற்களை விளங்கிக் கொள்வர். ஏனென்றால், ஆயினும், போன்ற சொற்கள் அடங்கும் வாக்கியங்களைக் கூறுவர்.

மூன்று செயல்கள் அடங்கும், அதாவது, இது, செய்து, அதன்பின், போன்ற செயல்களை செய்யும் ஆற்றல் உண்டு.
மேல், கீழ், இடது மூலையில், வலது மூலையில் போன்ற கட்டளைகளை விளங்கிக் கொள்வர். கூடிய சிரமமின்றி பேச்சைத் திருப்பிச் சொல்ல முடியும்.
அளவுகளுக்கு ஏற்ற சொற்களைக் கிரகித்துக் கொள்வர்.
சமூக வளர்ச்சி மற்றும் மனஎழுச்சி வளர்ச்சி போன்றவற்றை பயன்படுத்துவர்.

சிறுநகை புரிவர்.
பல்வேறு விதமான எண்ணங்களை வெளிப்படுத்துவர்.
வாய்விட்டுச் சிரிப்பர்.
பிடிப்பதற்கு, பற்றிக் கொள்வதற்கு அல்லது செலுத்து வதற்கு ஆற்றல் உண்டு.
செலுத்தும்போது இரு கைகளையும் பயன்படுத்துவர்.
விருந்தினரைக் காணும்போது அச்சமுறுவர்.
தூக்கிக் கொள்வதற்காக இரு கைகளையும் நீட்டிக் கொள்வர்.
பாடல்களைச் செவி மடுப்பதன் மூலம் சந்தோசமுறுவர்.
சந்தேகம் ஏற்படும் நிலைகளின்போது பிள்ளைகளையும் பெற்றோர்களையும் மற்றும் பழகியவர்களையும் நாடிச் செல்வர்.
பெற்றோரை பின் பற்றுவர்.
மூத்தோருடன் இருக்க விரும்புவர்.
மற்றைய பிள்ளைகளுடன் விளையாட விருப்பம் காட்டுவர்.
அன்றாட வேலைகளை மற்றவரைப் பின்பற்றிச் செய்வர்.
பிள்ளைகள் எப்போதும் விளையாடுவதற்கு விருப்பமுடன் இருப்பர்.
தம் முன்னால் இல்லாதிருக்கும் பொருள்கள் பற்றியும், இல்லாதிருக்கும் மனிதர்கள் பற்றியும் உரையாடுவர்.
மற்றைய பிள்ளைகளுடன் விளையாடுவதன் மூலம் சந்தோசம் அடைவர்.
மூத்தோருடன் கொண்டுள்ள தொடர்பு உடல் ரீதியானதாக மாற்றம் அடையும்.
நீண்ட நேரமாக அவதானிக்கும் ஆற்றலைக் காட்டுவர்.
எளிதான விதிகள் பற்றி அறிந்திருப்பர்.
மற்றவர்களின் செயல்களை அவதானத்துடன் செவிமடுப்பர்.
விடைகளை எதிர்பார்த்தவண்ணம் வினா எழுப்புவர்.

**வேற்றுமைகள்**

பால் அடிப்படையில் இனங் காணுவர்.
ஆண், பெண், ஆண்பிள்ளை, பெண்பிள்ளை என பகுத் தறிவர்.
இணைப்பதன் மூலம் பந்திகளுக்கிடையேயான வேறு பாடுகளை இனங் காணுவர்.

குறுகிய, நீளமான, பெரிய, சிறிய, தடிப்பமான, நெருக்கமான போன்ற சொற்களிடையேயுள்ள வேறுபாடுகளை அறிந்திருப்பர்.

காலை, மாலை நேரங்களை இனங் காணுவர்.

நான்கு நிறங்களையாவது சரியாக இனங் காணுவர்.

இடது கை, வலது கால் என்றவாறு தமதுடலில் இடது, வலது பாகங்களை பிழையின்றி இனங் காணுவர்.

கிழமை நாட்களை அறிந்திருப்பதோடு, அவற்றில் சில வற்றைப் பெயரிடுவர்.

நாள், கிழமை, நிமிடம், மணித்தியாலம் போன்றவற்றின் வேறுபாடுகளைக் கிரகித்துக் கொள்வர்.

பாரமான, பாரமற்ற, மேல், கீழ், உயர, தாழ இடுதல், அணைத்தல், நிரம்பிய, வெறுமையான போன்றவற்றின் வேறுபாடுகளை அறிந்திருப்பர்.

பெரிய, நடுத்தர, சிறிய என்றவாறு அளவுகளின் வேறுபாடுகளை இனங்காணுவர்.

பல்வேறு நிறங்களின் வேறுபாடுகளையும், வெளிறிய, தடிப்பமான, வெளிச்சமான, மெல்லிய போன்ற விஷேட சொற்களையும் அறிந்திருப்பர்.

இடம், வலம் ஆகியவற்றை இணைத்து கருத்துத் தெரிவிப்பர்.

**எண்**

ஒன்று, பல என்பவற்றிடையான வேறுபாடுகளைப் பிழையின்றிக் காட்டுவர்.

இரண்டு, அதிகம் என்பவற்றிடை வேறுபாட்டினை விளங்கி இருப்பர்.

10 பொருள்களைக் கணிப்பர்.

4 வரை எண்ணுவர் (கழித்தபடி)

சிறிதிலிருந்து பெரிது வரை பொருள்களை வரிசைப் படுத்துவர்.

30 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான பொருள்களைக் கணக்கிடுவர்.

13 அல்லது அதற்கு கூடிய வரை கணிப்பர்.

25 சதம் வரை நாணயங்களை இனங் காணுவர்.

01 சதத்தில் இருந்து 25 சதம் வரை நாணயங்களைக் கூட்டுவர்.

25 சதத்தில் மீதிப்பணத்தை மாற்றிக் கொடுப்பர்.

50 வரை பணத்தை அல்லது வேறு எதனையும் எண்ண முடியும்.

பல்வேறு வகையான நாணயங்களில் ஒன்று மற்றையதை விட அதிகமானதா, கூடியதா என்று குறிப்பிடுவர்.

9 இன் முன் 8, 9 இன் பின் 10 என்றவாறு தொடர்ச்சியாக எண்ணாமல் உதாரணம் ஒன்று தரப்பட்டவுடன் சரியான எண்ணைக் குறிப்பிடுவர்.

100 வரை பணத்தை எண்ணுவர்.

100 வரை 10 இன் எண்ணிக்கையாக மனனமாகக் கூறுவர்.

50 வரை 5 இன் எண்ணிக்கையாக மனனமாகக் கூறுவர்.
பல தரப்பட்ட நாணயங்கள் தரப்படும்போது, 25 சதமாக மாற்றித் தருவர்.
பல தரப்பட்ட நாணயங்கள் தரப்படும்போது, 50 சதமாக மாற்றித் தருவர்.
ரூபா 100 வரையான விலை அட்டவணையை அவதானித்து அதன் அடிப்படையில், ஒவ்வொரு பொருளுக்குமான பணத்தைக் கொடுப்பர்.
2.00 ரூபா வரையான விலைப் பட்டியலை அவதானித்து அதன் அடிப்படையில், ஒவ்வொரு பொருளுக்குமான பணத்தைக் கொடுப்பர்.
ரூபா 5.00 வரையான விலைப் பட்டியலை அவதானித்து, அதன் அடிப்படையில் ஒவ்வொரு பொருளுக்குமான பணத்தைக் கொடுப்பர்.

### நேரமும் அளத்தலும்

கிழமையில் எத்தனை நாட்கள் உண்டு என்பதுடன், கிழமையின் நாட்களை முறையாகக் கூறுவர். நாளைய தினம் எதுவெனக் கூறுவர். கிழமையின் தினம் எதுவெனக் கூறும் அதேசமயம் மாதம் வருடம் ஆகியவற்றையும் சரியாகக் காட்டுவர்.
கடிகாரத்தின் 1/4 மற்றும் 1/2 என்பதை விளங்கிக் கொள்வர்.
அளப்பதற்காக அளவுப் பாத்திரமொன்றை உபயோகிக்க முடியும். (1 பயின்ட் 1/2 பயின்ட் 1 கோப்பை என்றவாறு)
நேரம் குறிப்பிடப்படும்போது அதனைக் கடிகாரத்தில் காட்டுவர்.

### வாசிப்பும் எழுத்தும்

பென்சில் அல்லது வெண்கட்டியை பிடித்து நேரான வளைந்த கோடுகளை வரைவர்.
வட்டங்களைப் பார்த்து வரைவர்.
தலை, கால் ஆகியவற்றுடன் கூடிய மனிதனைக் கீறுவர்.
தெளிவாக காணத்தக்கவாறு மனிதர்களையும் வீடுகளையும் கீறுவர்.

தனது பெயரை எழுதும் அதேசமயம் மற்றைய பெயர்கள் எழுத்துக்களிடையே தமது பெயரை இனங்காணுவர்.
அன்றாடம் உபயோகிக்கப்படும் சொற்களிலிருந்து 30 அல்லது அதற்கு கூடிய சொற்களை இனங்காணுவர்.
பொது வாகனங்களில் காணப்படும் அறிவுறுத்தல்களை வாசிப்பர்.
தமது முகவரியை எழுதுவர்.
எளிதான அச்சிட்ட எழுத்துக்களை வாசிப்பர்.
1 - 100 வரை எண்களை எழுதுவர். வாசிப்பர்.
அளிக்கப்படும் எளிய உத்தரவுகளை வாசித்து விளங்குவர்.
எளிய செய்திகளை எழுதுவர்.
6 வயது மாணவருக்கு ஏற்ற புத்தகங்களை வாசிப்பர்.
9 வயது மாணவருக்கு ஏற்ற புத்தகங்களை வாசிப்பர்.

### தொழில் (நுண்ணிய இயக்கத்திறன்)

பெரிய மணிகளை கோர்க்க முடியும்

விரல்களை திருகி மூடியிலுள்ள ஆணியை கழற்ற முடியும்.

கத்தரிக்கோலினால் தாள்களைக் கத்தரிக்க முடியும்.

களிமண், மரம் முதலியவற்றால் சிலவற்றைத் தயாரிக்க முடியும்.

மிகவும் பிழையற்ற முறையில் இல்லாதபோதும் படங்களைக் கத்தரிக்க முடியும்.

நூற் பந்தொன்றைச் சீராகச் சுற்ற முடியும்.

கத்தரிக்கோலைப் பயன்படுத்தி துணிகளைக் கத்தரிக்க முடியும்.

பத்திரிகை, அட்டை போன்றவற்றை சுத்தமாக அடுக்கி வைக்க முடியும்.

கீறப்பட்ட கோட்டின் மேலாக சரியாக வெட்ட முடியும்.

கடதாசி மற்றும் நாடாக்களின் உதவியால் தக்கவாறு யாதொன்றையும் சுற்ற முடியும்.

### சுறுசுறுப்புத்தன்மை

கீழே விழாமல் பந்தொன்றை அல்லது பெட்டியினை காலினால் உதைக்க முடியும்.

10 செக்கன்களுக்கு விரல் நுனிகளினால் எழும்பி நிற்க முடியும்.

மரக்கட்டைகள் இரண்டை ஒன்றிணைப்பதற்காக, ஆணியையும், சுத்தியையும் பயன்படுத்துவர்.

ஆயுதங்கள், சமையலறை உபகரணங்கள், தோட்ட உபகரணங்கள் ஆகியவற்றை பயன்படுத்துவர்.

### மதிப்பீட்டின் பின்னர்

இம்மதிப்பீட்டின் பெறுபேறுகளை பெற்றோரிடம் விளக்க வேண்டும். மதிப்பீட்டின் பின்னர், மாணவனை பயிற்சி வேலைத் திட்டங்களில் ஈடுபடுத்துவதற்காக பெற்றோரை பங்கு கொள்ளச் செய்தல் இலகுவானதாகும். மாணவர் பாடசாலையில் கல்வி கற்பவராயிருப்பின், இம் மதிப்பீடு பற்றி அவ்வகுப்பாசிரியரின் கவனத்திற்கு கொண்டு வரல் வேண்டும். மேலும் பயிற்சி வேலைத் திட்டங்கள் பற்றி ஆசிரியரிடம் கலந்துரையாடப்படல் வேண்டும்.

### கீழ்வருவனவற்றை செய்தல் வேண்டும்

1. தமது பிள்ளைகளுக்கு எவ்வாறு பயிற்சி அளிக்கப் படல் வேண்டுமெனவும், அவர்கள் மேலும் இவ்வா றாகச் செயற்பட முடியுமாவெனவும் பெற்றோருக்கு அறிவு றுத்தப்படல் வேண்டும்.

2. மேலதிக வழிகாட்டலுக்காக மதிப்பீட்டிற்குப் பொறுப் பான ஆசிரியரினால் பெற்றோர் திரும்பவும் அழைக் கப்படல் வேண்டும்.

3. இவ்வாசிரியர் சில வேளைகளில் மேற்படி மாண வனைச் சந்திப்பதற்கு அவனது வீட்டிற்கு செல்லக் கூடும்.

4. மாணவனை ஒன்றிணைத்தல், பொதுப் பாடசாலை யின் விஷேட கல்வி அலகில் சேர்த்தல், தற்போது கல்வி கற்கும் பாடசாலையிலேயே தொடர்ந்தும் கற் றல் (இப்போதும் பாடசாலையில் கற்பவர்களினால்) போன்ற விடயங்கள் பற்றி வழிகாட்டல் வேண்டும்.

போதியளவு சந்தேகத்துடன் பொதுவான ஒன்றி ணைந்த கற்பித்தல் முறையினுள் சேர்த்தல்.

பலவீனமுள்ள இம்மாணவனின் கல்வி பற்றிய சிக் கலான கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டிய வழி வகைகளை உமது நினைவில் வைத்திருத்தல் வேண் டும். பாடசாலை நேரத்தின் பின்னர் இம் மாணவன் என்ன செய்வார் ? அவனது எதிர்காலம் எவ்வாறு அமையும் ? போன்ற கேள்விகளுக்கு விடை, இம் மாணவன் தான் அங்கவீன மாக காலம் கடத்திய அதே சமூகத்தில் வாழ முடியும் என்பதாகும். வாழ்க்கை தொடர்பாக அனுபவங்களை பெறும் சிறந்த வழி ஒன்றி ணைப்பாகும். பாடசாலை நேரத்தின் முன்னரும் பாட சாலை நேரத்தினுள்ளும் பாடசாலை நேரத்தின் பின் னரும் ஒன்றிணைக்கப்படுவதன் மூலம் வாழ்க்கை தொடர்பான அனுபவங் களைப் பெற்றுத் தர முடியும்.

**மாணவரின் விவர அறிக்கை**

01. மாணவர் பெயர் :-
02. பால் :-
03. பிறந்த திகதி :-
04. பிறந்த இடம் :-
05. பாடசாலையின் பெயர் :-
    முகவரி :-
    (சேர்க்கப்பட்டிருப்பின்)

**பெற்றோர் பற்றிய விவரம்**

06. தந்தையின் பெயர் :-
07. தொழில் :-
08. வதிவிடம் :-
09. அறிவிக்க வேண்டிய முகவரி :-
10. பிறந்த திகதி (வயது) :-
11. தாயின் பெயர் :-
12. தொழில் :-
13. வதிவிடம் :-
14. பிறந்த திகதி :-
15. பாதுகாவலர் பெயர் (பிள்ளை பாதுகாவலருடன் இருப் பாராயின் ) :-

16. அறிவிக்க வேண்டிய முகவரி :-
17. சொந்தம் :-
18. பாதுகாவலர் வதிவிடம் :-
முகவரி :-
19. தொழில் :-
20. அறிவிக்கப்பட வேண்டிய முகவரி :-
21. பிறந்த திகதி (வயது) :-
22. குடும்பத்தின் பிள்ளைகள் எண்ணிக்கை :-

| ஆண்கள் :- | பெண்கள் :- |
|---|---|
| வயது :- 1. | வயது :- 5. |
| 2. | 6. |
| 3. | 7. |
| 4. | 8. |

23. இம்மாணவன் குடும்பத்தின் எத்தனையாம் பிள்ளை :-

**மாணவனின் சுயவிபரம்**

கர்ப்பமுற்றிருக்கும் போது,

24. கர்ப்ப காலம் சுமுகமாக கடந்ததா ?
25. அக்காலத்தில் தாய் நோய்களினால் பாதிப்புற்றிருந் தாரா ? :-
26. குழந்தை எங்கு பெறப்பட்டது :-
27. குழந்தை பேற்றின் போது யார் உதவினார்கள் :-

**பொதுவான வளர்ச்சி**

28. பலவீன நிலை எப்படி அறிந்து கொள்ளப்பட்டது ? எப்போது ?
29. மாணவனிடம் காணப்பட்ட சிக்கல்கள் யாவை ?
30. பலவீனநிலை இனங் காணப்பட்டதன் பின் எடுத்த நடவடிக்கை யாது ?
31. பிள்ளை முளங்காலில் செல்ல எப்போது ஆரம் பித்தது ?
32. பிள்ளை பேச ஆரம்பித்தது எப்போது ?
33. பிள்ளை வேறு பிள்ளைகளுடன் பொதுவாக விளையாடுகின்றதா ?
    1. தமது வயதுப் பிள்ளைகளுடன்
    2. தமக்கு மூத்த பிள்ளைகளுடன்
    3. தமக்கு வயது குறைந்த பிள்ளைகளுடன்
34. அறிவுறுத்தல்களை ஏற்றுக் கொள்கின்றதா ?
35. பிள்ளை பொதுவாகப் புத்திசாலித்தனமாக கலந் துரையாடுகின்றதா ?

36. உதவியின்றி நடக்கின்றதா ?

37. குடும்ப அங்கத்தினருக்கு பிள்ளை சிரமமளிக்காத பிள்ளையாக காணப்படுகின்றதா ?

38. அவனுக்கு தேவையேற்படும்போது எவ்வாறு செயற்படுகின்றான் ?

39. மலங்கழிக்க தேவையேற்படும்போது எவ்வாறு செயற்படுகின்றான் ?

40. தனது உடையை நனைத்துக் கொள்கின்றானா ?

41. உதவியின்றி மலகூடம் செல்கின்றானா ?

### பாடசாலையினுள் நடத்தை

42. அவனது நடத்தை :-

1. தமது வகுப்பின் சக மாணவருடன் :-
2. வேறு மாணவருடன் :-
3. வகுப்பாசிரியருடன் :-
4. பாடசாலையின் வேறு ஆசிரியர்களுடன் :-

### குடும்ப விபரம்

43. மாணவனின் வேறு சகோதரர், சகோதரிகள் பலவீனங்களினால் அல்லலுறுகின்றனரா ?

அவ்வாறாயின் எத்தனை பேர் :-

எவ்வகையான பாதிப்பு :-

i. சகோதரர்கள் :-
ii. பலவீனமானவர்கள் :-
iii. சகோதரிகள் :-
iv. பலவீனமானவர்கள் :-

44. சகோதர சகோதரிகளின் பலவீனத்திற்கான காரணம் யாது ?

45. தாயின் அல்லது தகப்பனின் குடும்பத்தில் பலவீனமான அங்கத்தினர் உள்ளனரா ?

குடும்ப நிலை பற்றிய தந்தையின் வெளிப்பாடு :-

குடும்ப நிலை பற்றிய தாயின் வெளிப்பாடு :-

## ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி

இலங்கை அரசாங்க அச்சுத்திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.